1068



# விமோசனம்

ஒரு மாதப் பத்திரிகை

| தொகுதி | ஆசிரியர்: | பகுதி |
|---|---|---|
| 1 | சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரி | 4 |

## சுக்ல-ஹூ
## கார்த்திகை

புதுப்பாளையம்
**காந்தி ஆசிரமம்,**
திருச்செங்கோடு.

வருஷச் சந்தா தபாற்கூலி உள்பட ரூபாய் ஒன்று.
தனிப்பிரதி அணா ஒன்று, தபாற்கூலி வேறு.

# பொருளடக்கம்.


| | |
|---|---|
| அமிருதம் விஷமாகிறது—படம் | 121 |
| ஹிம்சை | 122 |
| சின்னத்தம்பியும் திருடர்களும் (படங்களுடன்) | 123 |
| சேர்ந்து உழைத்தல்—படம் | 126 |
| மதுபானக் கணக்கு | 127 |
| விஷம் ஏறிக்கொண்டே வருகிறது | 128 |
| கள்ளின் வேகமும் மேடை பிரசாரமும்—படம் | 129 |
| திருட்டுக் கள்ளு | 130 |
| இறக்குமதி | 130 |
| கட்டாயப்படுத்தலாமா | 131 |
| எதைப் பூட்டுவது ?—படம் | 131 |
| மதுவிலக்கின் பயன்—சக்கரம் | 132 |
| வினவிடை | 133 |
| மிராசுதார் சுந்தரப்பையர் | 138 |
| ஆயுள் பாங்கிகள் | 140 |
| திருட்டுக் கள்ளும், பகிரங்கக் கள்ளும்—படம் | 141 |
| அரசூர் பஞ்சாயத்து | 142 |
| சம்பளதினம்—படங்கள் | 151 |
| சுதந்திரம் | 152 |
| அநியாய வரி | 153 |
| ஜில்லாவாரி கலால் வருமானம் | 154 |
| கடற்கரைக் கிளிஞ்சல் | 156 |



இந்த மாதப்பத்திரிகை வேண்டுவோர் ரூ. 1—0—0 வருஷ சந்தா தொகையுடன் "விமோசனம்" காரியதரிசி, காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு என்ற விலாசத்திற்கு எழுதிப் பதிவுசெய்து கொள்ளலாம். அயல் நாட்டுக்கு அதிக தபாற்கூலி 0—2—0 சேர்த்து அனுப்பவேண்டும். தனிப் பிரதி எல்லாக் காதி வஸ்திராலயங்களிலும் மற்ற இடங்களிலும் பெறலாம். விலை அணா ஒன்று. தபாலில் எழுதிப்பெற்றால் தபாற்கூலி சேர்த்து 0—1—6.

# வி மோ ச ன ம்


| தொகுதி 1 | சுக்ல௵ கார்த்திகை௴ | பகுதி 4 |
| --- | --- | --- |




## அமிருதம் விஷமாகிறது

தேங்காய் தேகத்திற்கு பலம் கொடுக்கும். வாய்க்கு இனிமையா யிருக்கும். சுவாமிக்கு நைவேத்தியமாகும்.

பூதேவி வயிற்றிலிருந்து அமிருத ஊற்று மேலே மரத்தில் ஏறித் தேங்காயாகக் கருத்தரித்து வளரும் சமயத்தில் மனிதன் கூரிய கத்தியால் அக்கருவை யழித்து இரத்தத்தைக் குடத்தில் வடியச் செய்து அதைக் கள்ளாகச் செய்து விடுகிறான்.

# ஹிம்சை

நல்ல அமிருதத்தையுங்கூட புத்தியில்லாத மனிதன் பொல்லாத விஷமாகச் செய்து விடுகிறான். தேங்காய் தேகத்திற்கு பலமும் அழகும் கொடுக்கக்கூடிய உணவு. வாய்க்கு இனிமையா யிருக்கும். சுவாமிக்கு நைவேத்தியமாகும். பூலோக கற்பக விருக்ஷமாகத் தென்னை மரத்தைச் சொல்லுவது தகுதியேயாகும்.

பூதேவியின் அமிருத ஊற்று மேலே எறி மரம் கருத்தரிக்கும் சமயத்தில் மனிதன் கூரான கத்தியால் அக்கருவை யழித்து வடியும் இரத்தத்தைக் குடத்தில் பிடித்து அதைக் கள்ளாகச் செய்து குடித்து மதி யிழந்து ஆரோக்கிய மிழந்து நாசமாகிறான்.

மற்ற தேசங்களிலும் சாராயம் காய்ச்சவும் பீர் முதலிய மதுபானம் செய்யவும் உணவுப் பொருள்களைப் பாழாக்குகிறார்கள். நம்முடைய நாட்டில் உணவுப் பொருள்களைப் பாழாக்குவதோடு அப்பொருள்களைத் தரும் மூலாதாரமான நல்ல மரங்களையே பாழாக்குகிறோம். ஒயின் செய்ய திராட்சைப் பழங்களைக் கசக்கிச் சாறு எடுக்கிறார்கள். செடியைப் பாழாக்குவதில்லை. ஆனால் நாம் கள்ளுக்காக மரத்தையே வதம் செய்து விடுகிறோம். இதைப்பற்றி சர்க்கார் விவசாய இலாகாவில் கவனித்து விவசாயிகளுக்கு நல்ல புத்தி சொல்லமாட்டார்கள். சர்க்காரே கள்ளு வியாபாரத்தின் லாபத்தை எதிர்பார்க்கிறார்கள். கள்ளுக்கு விடுவதினால் மரம் கெட்டுப்போகும் என்று அவர்கள் சொல்லமாட்டார்கள். ஆனால் நமக்கு புத்தியில்லையா? கையில் உடனே ரூபாய் போடுகிறார்கள் என்று ஏமாந்து முன்னோர்கள் வளர்த்த தென்னந்தோப்புகளைப் பாழாக்கலாமா?

பச்சை மரத்தை வெட்டக்கூடாது. தோப்புகளை வளர்க்கவேண்டும். ஒவ்வொருவனும் இறப்பதற்கு முன் ஒரு மரமாவது புதிதாக வளர்த்துப் பின்சந்ததிகளுக்கு வைத்துவிட்டுப் போகவேண்டும். இப்படி யிருக்க மரங்களைப் பாழாக்குவது பெரும் பாவமாகும். கள்ளு எடுப்பதால் மரம் சாகாது என்று சிலர் சொல்லலாம். கள்ளுக்கு விடப்பட்ட மரத்தின் பலம் குறைந்து போகும்; வளர்ச்சி குறைந்து போகும்; ஆயுள் குறைந்து போகும்; இவை எவனுக்கும் தெரியும். மரத்தின் ஜீவரஸம் தான் காய் வடிவாகிறது. எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு மரம் தன் இரத்தத்தைக் கொண்டு கருத்தரித்து உண்டான சிசுவுக்கு உணவு ஊட்டி வளர்த்து வரும். கள்ளு இறக்குவதோ அப்படியல்ல. மரத்தில் ஈரம் வற்றும் வரையில் குடத்தில் வடிய வேண்டியது. அதன் கஷ்டம் நமக்குத் தெரியாது. வாயில்லாதபடியால் கொஞ்ச நாள் வரையில் பொறுத்துக் கொண்டிருந்து பிறகு உயிரை விட்டு விடுதலை அடைகிறது.

# சின்னத் தம்பியும் திருடர்களும்

[ரா. கி.]

ஒரு ஊரில் சின்னத்தம்பி என்ற ஒரு வாலிபன் இருந்தான். அவன் ஏழை; தகப்பனில்லாதவன். ஒரு நாள் அவன் பணம் சம்பாதித்து வருவதற்காகப் பட்டணத்துக்குப் புறப்பட்டான்.

அவன் கிளம்பியபோது அவன் தாயார் அவனிடம் ஒரு வைரக் கல்லைக் கொடுத்துப் பின் வருமாறு சொன்னாள் :— "குழந்தாய்! உன்னுடைய தகப்பன் உனக்குத் தேடிவைத்த சொத்து இந்த வைரம் ஒன்று தான். இதை நீ வெகு ஜாக்கிரதையாகக் கொண்டு போகவேண்டும். பட்டணத்தில் இதற்கு நல்ல விலை கொடுப்பார்கள். இதை விற்று வந்த பணத்தை முதலாக வைத்துக் கொண்டு நாணயமாக வியாபாரம் செய்தால் சீக்கிரம் நல்ல பணம் சம்பாதித்துக் கொண்டு திரும்பலாம். வழியிலே திருடர் பயம் அதிகம். வழிப்போக்கர்கள் யாரையும் நம்பிவிடாதே. சிலர் உன்னோடு சினேகமாய்ப் பேசிக் கொண்டே வந்து சமயம் பார்த்து வைரத்தை அடித்துப் பறித்துக் கொள்வார்கள். ஜாக்கிரதையாயிருந்து பிழை" என்றாள்.

அந்த வைரத்தின் பெயர் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அதன் பெயர் அறிவு.

சின்னத்தம்பி வைரத்தை வாங்கி பத்திரமாய் முடிந்து கொண்டு புறப்பட்டான். சாலையில் கொஞ்சதூரம் சென்றதும் அவன் ஒரு வழிப் போக்கனைக் கண்டான்.

"தம்பி, தம்பி, எங்கே போகிறாய்?" என்று கேட்டான் வழிப் போக்கன்.

"பட்டணத்துக்குப் பணம் சம்பாதிக்கப் போகிறேன், ஐயா!" என்றான் சின்னத்தம்பி.

"அப்படியா? நானும் பட்டணத்துக்குத்தான் போகிறேன். இருவரும் சேர்ந்து போகலாம்" என்று வழிப்போக்கன் சொன்னான்.

சின்னத்தம்பி தன் தாயார் சொல்லிய புத்திமதிகளை நினைத்துக் கொண்டான். "உன் பெயரென்ன?" என்று கேட்டான்.

"என் பெயர் சோம்பல்" என்றான் வழிப்போக்கன்.

"ஓகோ! உன்னைப்பற்றி என் தாயார் சொல்லியிருக்கிறாள். நீ பொல்லாத திருடன். உன் சகவாசம் எனக்கு வேண்டாம்" என்று சொல்லி விட்டுச் சின்னத்தம்பி ஓட்டம் பிடித்தான்.

திருடன் "இந்தா! பிடி!" என்று கூச்சலிட்டுக் கொண்டே தொடர்ந்து ஓடினன். என்ன ஓடியும் சின்னத்தம்பியை அவனல் பிடிக்க முடியவில்லை.

இன்னும் கொஞ்சதூரம் சென்றதும் வேருெரு ஆள் எதிர்ப்பட்டான்.

"தம்பி, தம்பி, எங்கே போகிருய்?" என்று அவன் கேட்டான்.

"பட்டணத்துக்குப் பணம் சம்பாதிக்கப் போகிறேன்" என்ருன் சின்னத்தம்பி.

"அப்படியா? சந்தோஷம். நாம் இருவரும் பேசிக்கொண்டே போகலாம்" என்ருன் அம்மனிதன்.

"நீ யார்?" என்று கேட்டான் சின்னத்தம்பி.

"என்னைத் தெரியாதா? நான் தான் வியாதி" என்று அம்மனிதன் கூறினன்.

"ஐயோ! நீ சோம்பலை விடப் பொல்லாத திருடனயிற்றே. நீ என் சுகத்தைத் திருடிக்கொள்வாய். வேண்டாம் உன் உறவு எனக்கு" என்று சொல்லிவிட்டுச் சின்னத்தம்பி ஓட்டமெடுத்தான்.

வியாதி ஓடி ஓடிப்பார்த்தும் அவனைப் பிடிக்கமுடியவில்லை.

இன்னும் போகப்போக வழியில் சூதாட்டம், கோபம், சண்டை, மூர்க்கம், விபசாரம் முதலிய திருடர்கள் ஒவ்வொருவராக எதிர்ப்பட்டுச் சின்னத் தம்பியை வழிமடக்கப் பார்த்தார்கள். எல்லாரையும் ஏமாற்றிப் பின்னல் விட்டு விட்டுச் சின்னத்தம்பி முன்னல் போய்க்கொண்டிருந்தான்.

மேலே சொன்ன சோம்பல், வியாதி விபசாரம், முதலிய திருடர்கள் எல்லாரும் ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இக்கூட்டத்திற்கு ஒரு தலைவன் இருந்தான். அவன் பெயர் மதுசாரம். இவன் சமயத்துக்குத் தகுந்தபடி வேஷம் போட்டுக்கொள்வதில் தேர்ந்தவன். கள்ளு, சாராயம், ஒயின், பிராந்தி, வுஸ்கி, பீர், அபினி, கஞ்சா என்று விதவிதமான பெயர்களை வைத்துக்கொண்டு பெயருக்கேற்ப வெவ்வேறு வேஷங்கள் அவன் போட்டுக் கொள்வான்.

கடைசியாக, இத்திருடர் தலைவனை நமது சின்னத்தம்பி சந்தித்தான்.

"தம்பி, தம்பி, எங்கே போகிருய்?" என்ருன் திருடர் தலைவன்.

"பட்டணத்துக்குப் போகிறேன். நீ யார்?" என்று சின்னத்தம்பி கேட்டான்.

"என் பெயர் மதுசாரம்" என்ருன் திருடன்.

சின்னத்தம்பி தனக்குள் இவ்வாறு யோசித்துக் கொண்டான்:—
"இவனைப்பற்றி என் தாயார் சொல்லவில்லை. இவன் வெகு உற்சாக

புருஷனுய்க் காணப்படுகிருன். உடல் பெருத்து நல்ல உடையணிந்து பெரிய மனிதன்போல் தோன்றுகிருன். இவன் திருடனுயிருப்பானு? எப்படியானுலும் நாம் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். தாயார் ஒரு வேளை இவனைப்பற்றிச் சொல்ல மறந்திருக்கலாம்."

இப்படி யெண்ணிச் சின்னத்தம்பி வேகமாய் நடக்கலானுன்.

அப்பொழுது திருடர் தலைவன் "ஏனப்பா இவ்வளவு விரைவாக ஓடுகிருய்? கொஞ்சம் மெதுவாய் நட. என்ன அவசரம்? பட்டணத்தில் நான் ரொம்ப அனுபவமுள்ளவன். பணஞ் சம்பாதிக்கும் வழியெல்லாம் நான் சொல்லித் தருகிறேன்" என்றுன்.

சின்னத்தம்பி இந்த ஆசை வார்த்தையில் மயங்கிவிட்டான். "இவன் திருடனு யிருக்கமாட்டான். இவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டு



கொஞ்சம் முன்னுலேயே போய்க் கொண்டிருக்கலாம். அப்படி ஒருவேளை இவன் திருடனுயிருந்து நம்மைப் பிடிக்க வந்தாலும், ஒரே ஓட்டமாய் ஓடித் தப்பித்துக் கொள்ளலாம். இத்தனை திருடர்களை ஏமாற்றி வந்த எனக்கு இந்தப் பொதியனைத் தானு ஏமாற்றமுடியாது?" என்று அவன் எண்ணினுன். ஆகவே கொஞ்சம் மெதுவாய் நடந்தான்.

திருடர் தலைவன் இனிமையாகப் பேசிக்கொண்டே கொஞ்சம் கொஞ்சமாய் நெருங்கி வந்தான். "ஆஹா! இவனுடன் பேசினுல் எவ்வளவு உற்சாகமாயிருக்கிறது?" என்று சின்னத்தம்பி நினைத்தான். நிரம்ப அருகில் வந்ததும் திருடர் தலைவன் ஒரே தாவலாய்த்தாவி சின்னத் தம்பியைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான்.



சின்னத்தம்பி ஆனமட்டும் அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றுன். ஒன்றும் முடியவில்லை. திருடன் அவனைச் சோதனைபோட்டு அவன் பத்திரமாய் முடிந்து வைத்திருந்த வைரத்தைப் பிடுங்கிக்கொண்டான். இதற்குள் பின்னுல் தங்கிய வியாதி, விபசாரம், சூதாட்டம், சோம்பல் முதலிய திருடர்களும் ஓடிவந்து அவனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

திருடர் எல்லாரும் சேர்ந்து அவனைத் தங்கள் இருப்பிடத்துக்கு வரும்படி அழைத்தார்கள். சின்னத்தம்பி பார்த்தான். "வைரந்தான் போய்விட்டது. பட்டணத்துக்குப்போய் என்ன செய்வது? இவர்களுடன் தான் போவோமே?" என்றெண்ணினுன்.

பாவம்! இவ்வாறு சின்னத்தம்பி திருடர் தலைவனுக்கு அடிமைப்பட்டான். மற்ற எல்லாத் திருடர்களுக்கும் அவன் குற்றேவல் செய்ய

வேண்டியிருந்தது. இவ்வாறு சிலகாலம் அடிமையாயிருந்து உழைத்து விட்டுக் கடைசியில் அவன் மாண்டுபோனான்.

வாழ்க்கைப் பிரயாணம் தொடங்கும் எத்தனையோ ஏழை ஜனங்கள் சின்னத்தம்பியைப் போல் மதுசாரம் என்னும் கொள்ளைத்தலைவனுக்கு அடிமையாகிறார்கள். முதலிலேயே அவன் பெரிய கள்ளன் என்பதை அறிந்து அருகில் நெருங்க விடாதிருந்தால் பிழைக்கலாம். அவனுடைய இனிய பேச்சுக்குக் கொஞ்சம் செவி கொடுத்துவிட்டால் பிறகு வலையில் விழ வேண்டியது தான். நயவஞ்சகத்தில் அவன் மிகத் தேர்ந்தவனாதலால் அறியாத ஜனங்கள் எத்தனையோ பேர் அவனை நெருங்க விட்டு அதோகதி அடைகிறார்கள். இப்படிப்பட்ட கொடிய கள்ளனைப் பிடித்து நாட்டை விட்டுத் துரத்துவது சர்க்காரின் கடமையல்லவா? ஆனால் அதற்குப் பதிலாக நமது சர்க்கார் இவனுடன் சண்டைபோட முடியாதென்று இந்தப் பாதகனுக்கு லைஸென்ஸ் கொடுத்து வழிப்போக்கர்களைத் தன் வலையில் போட்டுக்கொள்ளும்படி விட்டிருக்கிறார்கள்!

---



சேர்ந்து உழைத்தால் பலனுண்டு. ஒவ்வொருவர் ஒவ்வொரு பக்கம் போனால் முடியாது. இரண்டு கழுதைகளுக்கு உண்டான அனுபவத்தை இந்தப் படத்தில் பார்க்கலாம்.

# சென்னை மாகாண மதுபானக் கணக்கு

1929-ம் வருஷத்தில் சென்னை மாகாணத்தில் குடிக்கப்பட்ட மது வகைகள் :—

| | | |
|---|---|---|
| வுஸ்கி பிராந்தி முதலியவை | 1,47,977 | காலன் |
| ஒயின் வகைகள் | 25,835 | ,, |
| பீர் | 9,87,816 | ,, |
| சாராயம் | 15,96,998 | ,, |

அதாவது சுமார் 28 லக்ஷம் காலன்கள். புட்டிக் கணக்கில் 168 லக்ஷம்புட்டிகளாகும். நாள் ஒன்றுக்கு நாற்பத்தாறுயிரம் புட்டிகள் காலியாகின்றன.

மேற்கண்ட கணக்கில் கள்ளு சேரவில்லை. இதுதான் பெரிய பிசாசு. கள்ளைப்பற்றி சர்க்கார் சரியான கணக்கு கொடுப்பதில்லை. அவர்கள் அச்சிட்டிருக்கும் கணக்கின்படி 27 லக்ஷம் மரங்கள் கள்ளுக்கு விடப்பட்டிருக்கின்றன. வருஷம் முழுதும் மாறி மாறி இத்தனை மரங்களிலிருந்து கள்ளு இறக்கப்பட்டால் குறைந்தது 15 கோடி காலன் கள்ளு விற்பனையாகி வரவேண்டுமென்று தெரியவருகிறது. அதாவது வருஷம் ஒன்றுக்குக் கள்ளுக்குச் செலவு 10 கோடி ரூபாய்க்கு மேல். ஏன் தரித்திரம் வளராது ?

மதுவிலக்கினல் இத்தனை பணமும் ஏழைகளுக்கு வருஷா வருஷம் மிஞ்சும். ஏழைகள் வீட்டில் இந்தக் கோடிக்கணக்கான ரூபாய் நின்றால் அது சும்மா தூங்காது. பணத்துக்கு உயிருண்டு. அது நாட்டில் மற்ற வியாபாரங்களுக்குள் ஓடிச்சேரும். ஒரு துணி வாங்குவதற்கு பதில் ஏழை இரண்டு துணி வாங்குவான். ஒரு படி சோளத்திற்கு பதில் இரண்டு படி வாங்குவான். மிஞ்சின பணம் நல்ல பொருள்கள் வாங்கி உபயோகிப்பதில் செல்வாகும். இப்படி எல்லா வியாபாரங்களும் செழித்து தேசம் பெரிய லாபம் அடையும்.

# விஷம் ஏறிக்கொண்டே வருகிறது

சென்னை மாகாணத்தில் கட்குடியின் வளர்ச்சியைப் பாருங்கள். மூன்று வருஷத்திய மதுபானக்கணக்கை அடியில் காணலாம்:—

| | 1927 ஹூத்தில் செலவானது | 1928 ஹூத்தில் செலவானது | 1929 ஹூத்தில் செலவானது | |
|---|---|---|---|---|
| சாராயம் | 14,47,670, | 14,38,524, | 15,96,998 | காலன் |
| வுஸ்கி, பிராந்தி | 1,24,705, | 1,38,462, | 1,47,977 | ,, |
| பீர் | 7,00,889, | 7,63,220, | 9,87,816 | ,, |

இந்தக் கணக்கில் கள்ளு சேரவில்லை. சர்க்கார் கள்ளு வருமானத்தின் வளர்ச்சியினால் கடைகளில் எவ்வளவு கள்ளு செலவாயிற்றென்று கண்டு கொள்ளலாம்.

1927-ம் வருஷத்திய கள்ளு வருமானத்தைக் காட்டிலும் 1928-ம் ஷத்தில் 11 லக்ஷம் ரூபாய் அதிகம். 1929-ம் வருஷத்தில் அதற்குமேல் 14 லக்ஷம் ரூபாய் அதிகம். ஒரு ரூபாய் சர்க்கார் வருமானம் உயர்ந்தால் குடித்தவன் கொடுத்தது ஐந்து ரூபாய். இரண்டு வருஷத்தில் கள்ளில் மட்டும் 25 லக்ஷம் ரூபாய் வருமானம் அதிகம். சாராயம் சென்ற வருஷத்திற்குமேல் இவ்வருஷத்தில் 9 லக்ஷம் புட்டி அதிகம் செலவாயிற்று. ஒட்டு மொத்தம் இவ்வருஷத்தில் சாராயம் 96 லக்ஷம் புட்டி விற்பனை. பீர்கணக்குப் பார்த்தால், 1927-ம் வருஷத்தில் அதில் சர்க்கார்தீர்வை வசூல் $4\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய். 1928-ம் வருஷத்தில் 5 லக்ஷத்து நாற்பதினாயிரம் ரூபாய். 1929-ம் வருஷத்திலோ 6 லக்ஷத்திற்குமேல். ஒயின், வுஸ்கி, பிராந்தி வகைகளில் 1927-ம் வருஷத்தில் சர்க்கார் வரும்படி 7 லக்ஷம் ரூபாய். இவ்வருஷம் 9 லக்ஷம் ரூபாய். இவைகளிலிருந்து இச்சரக்குகளை வரவர எவ்வளவு அதிகமாகக் குடித்து வருகிறோம் என்று அறியலாம்.

கஞ்சா அபினியுங்கூடக் குறையவில்லை:—

| | 1927ஹூ | 1929ஹூ |
|---|---|---|
| கஞ்சா | 14 லக்ஷம் ரூ. | 18 லக்ஷம் ரூ. |
| அபினி | 42 லக்ஷம் ரூ. | 45 லக்ஷம் ரூ. |

இது சர்க்கார் வருமானம். ஜனங்கள் கொடுப்பது அபினி கஞ்சாவுக்கு ஏறக்குறைய ஒரு கோடிக்கு வந்துவிட்டது. இவ்வருஷத்தில் சென்னை மாகாண சர்க்காருக்கு மொத்த மதுபான வருமானம் 5 கோடி, 64 லக்ஷம் ரூபாய். முன் வருஷத்தைவிட 39 லக்ஷம் ரூபாய் அதிகம். இது புது வருஷத்திய செய்தி.

## குடி கெடுக்கும் கள்ளின் வேகமும்

## மேடைப் பிரசாரத்தின் நிதானமும்



தினந்தோறும் நடக்கும் அநியாயம். ஏழைகளுடைய கூலிப் பணம் போகும் போக்கு.

மற்ருெரு புறம் "சர்க்கார் வருமானம் குறைந்து போகும். மது விலக்கு நல்லது தான். ஆனல் அவசரப்படக் கூடாது" என்று பிரசங்கம் நடக்கிறது.

# திருட்டுக்கள்ளு

பூரணமதுவிலக்குச் சட்டம் செய்துவிட்டால் திருட்டு வியாபாரம நடக்கும் என்று ஒரு பயம் காட்டிவருகிறார்கள். ஆனால் இது பொய் வாதம். கொலை, களவு, மோசடி இவைகளை விலக்கச்சட்டம் செய்திருக்க வில்லையா? ஆனாலும் அவை சிலசமயம் நடக்கவில்லையா? அதற்காக சட்டத்தையே ரத்து செய்யலாமா? தற்போது நடைபெறும் மது ஆட்சியில் தான் திருட்டுச் சாராயம் காய்ச்சவும் திருட்டுக் கள் இறக்கவும் சௌகரியம். எவ்விதக் கள்ளும் கூடாது என்று விதித்தால் திருட்டுக்கள்ளைப் பிடிப்பது சுலபமாகும்.

1927-ம் வருஷத்தில் திருட்டுக்கள்ளும் திருட்டுச் சாராயமும் இல்லாமல் போகவில்லை. சர்க்கார் கணக்குப்படி 17,472 கேசுகள் நடந்தன. 1928-ம் வருஷத்தில் 18,653 கேசுகள். 1929-ம் வருஷத்தில் 19,696 கேசுகள் நடந்தன. கச்சேரிக்கு வராதவையும் எத்தனையோ! பணம் எப்படியாவது சம்பாதிக்கவேண்டும் என்கிற துராசையால் தூண்டப்பட்டுத் திருட்டு வியாபாரம் செய்ய எப்போதும் சிலர் பார்ப்பார்கள். ஆனால் திருட்டுத்தனமாய் ஏதோ சிலர் கெட்டுப் போவார்களே என்று பரிதாபப் பட்டு, பகிரங்கமாய் ஜனங்களை லக்ஷக்கணக்கில் கெடுப்பது முறையாகுமா?

# இறக்குமதி

இந்தியாவில் உண்டாகும் கள்ளும் சாராயமும் போதாது என்று நம்முடைய நாட்டில் சீமையிலிருந்து கப்பலில் இறங்கும் கணக்கைப் பாருங்கள். சென்னை மாகாணத்தில் 1927-ம் வருஷத்தில் இறங்கிய சரக்கு மொத்தம் 5,06,696 காலன். 1928-ம் வருஷத்தில் 5,85,734 காலன். 1929-ம் வருஷத்தில் 7,25,658 காலன். விஷம் ஏறுவதைப் பாருங்கள். இவ்வளவுக்கும் மருந்துவகைகளுக்காக இறங்கின மதுஸார சாமான்கள் குறைவு. 1927-ம் வருஷத்தில் மருந்துகளில் வந்த மதுஸாரம் 15000 காலன் தான். 1928-ம் வருஷத்தில் 13000 காலன் தான். 1929-ம் வருஷத்தில் அதற்கும் குறைவு: 12908 காலன். குடித்து வெறி கொள்ளும் சரக்கே 1927-ம் வருஷத்தில் 5 லக்ஷம் காலனாயிருந்தது இவ்வருஷத்தில் 7¼ லக்ஷம் காலனாயிற்று.

# கட்டாயப்படுத்தலாமா?.

## காந்தியைக் கேளுங்கள்:

"கள்ளுக்குடியை துன்மார்க்கப் பழக்கம் என்று சொல்லுவதைக் காட்டிலும் அதை ஒரு வியாதி என்று சொல்லுதலே அதிக பொருத்தமா யிருக்கும். நோயாளிகளுக்குக் கட்டாயப்படுத்தி மருந்து கொடுப்பது போல், குடிகாரர்களுக்கும் பலவந்தமாக நோய் தீர உதவி செய்ய வேண்டும்" என்று மகாத்மா காந்தி எழுதி யிருக்கிறார்.

"இந்திய ஜனங்கள் குடியின் தீமைகளை நன்குணர்ந்திருக்கிறார்கள். மது வியாபாரத்தை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று இந்த நாட்டின் அறிவாளிகள் அனைவரும் விரும்புகிறார்கள். அவர்களுடைய ஒரு முகமான அபிப்பிராயத்துக்கு நேர் விரோதமாக சர்க்கார் இந்த வியாபாரத்தை நடத்தி வருகிறார்கள். இந்தியாவைத் தவிர வேறெந்த நாட்டிலும் இப்படிப்பட்ட காரியம் செய்ய முடியாது" என்றும் அவர் சொல்லுகிறார்.

---




கள்ளுக் குடித்துக் கெட்டுப்போனவனை ஜெயிலில் மூடி வைப்பதை விடக் கள்ளுக்கடையை மூடிப் பூட்டுப் போட்டால் ஏழைகளை விடுவிக்கலாம்.




இது மதுவிலக்கினால் அமேரிக்காவில் உண்டான நன்மையைக் காட்டும் சக்கரம். ஏழைகள் சேவிங்க்ஸ் பாங்கியிலும், மர்ண நிதிகளிலும், ஐக்கிய சங்கங்களிலும் அதிகமாகப் பணம் கட்டி வருவதை இது தெரிவிக்கிறது. கீழே வருஷம் காட்டி யிருக்கிறது. 1910 ௵ முதல் 1927 ௵ வரையில் கட்டின தொகை வருஷம் பிரதி உயர்ந்து வந்திருப்பதைக் காணலாம். அந்தந்த வருஷத்திற்கு நேராக மேலே கோடு எங்கே இருக்கிறது என்று பார்த்து அந்த உயரத்திற்கு உரிய ரூபாய் மெத்தத்தை அறிந்துகொள்ளலாம். இந்த மொத்தம் அமெரிக்காவில் அந்த வருஷத்தில் ஒவ்வொருவனுடைய சராசரி கட்டணம். உதாரணம்: 1921 ௵த்தில் ஒருவனுடைய சராசரி ஐக்கிய சங்க கட்டணம் ரூ. 50. 1925 ௵த்தில் ரூ. 100. மரண நிதி கட்டணம் 1921 ௵த்தில் சராசரி ரூ. 150. 1925 ௵த்தில் ரூ. 200. சேவிங்க்ஸ் பாங்கி சராசரி கட்டணம் 1921 ௵த்தில் ரூ. 300க்குக் கொஞ்சம் அதிகம். 1925 ௵த்தில் ரூ. 400க்கு அதிகம். சக்கரத்தைக்கொண்டு எந்த வருஷத்திய சராசரி கட்டணமும் கண்டு கொள்ளலாம்.

# மது விலக்கு வினு விடை

## 1

வினு :—மதுவிலக்கு இயக்கம் என்பது என்ன ?

விடை :—மதுஸாரம் அடங்கிய எல்லாவிதப் பொருள்களையும் தேசத்திலிருந்து ஒழித்துவிட வேண்டுமென்னும் கிளர்ச்சிக்கு மதுவிலக்கு இயக்கம் என்று பெயர்.

வினு :—மதுஸாரம் என்பது யாது ?

விடை :—கள், சாராயம், பீர், ஒயின், பிராந்தி, வுஸ்கி முதலிய பானங்களிலும், கஞ்சா, அபினி முதலிய மருந்துகளிலும் உள்ள போதை தரும் சத்தை மதுஸாரம் என்று சொல்வார்கள்.

வினு :—மேற்கூறிய பானங்களையும், மருந்துகளையும் அருந்துவதினுல் மக்களுக்கு ஏதேனும் நஷ்டம் உண்டா ?

விடை :—நஷ்டம் ஒன்றிரண்டல்ல ; பொருள் நஷ்டம், ஆரோக்கியக் குறைவு, சன்மார்க்க நஷ்டம், அறிவு நஷ்டம், ஆத்ம நஷ்டம் முதலிய பலவகை நஷ்டங்கள் ஏற்படுகின்றன.

வினு :—பொருள் நஷ்டம் ஏற்படுவது எப்படி ?

விடை :—சென்ற வருஷத்தில் நமது நாட்டில் கள் சாராயம் குடித்த வகையில் மொத்தம் 24 கோடி ரூபாய் அரசாங்கத்துக்கு வருமானம் வந்திருக்கிறது. மரங்களின் சொந்தக்காரர்கள், கள்ளு, சாராயக்கடைக் குத்தகைதாரர்கள், அயல் நாட்டு மது வியாபாரிகள் முதலியவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தையும் வியாபாரச் செலவையும் சேர்த்துப் பார்த்தால் மொத்தம் மதுபான வகைகளில் நமது தேசத்தார் வருஷம் 1-க்கு 100 கோடி ரூபாய் செலவு செய்கிறூர்களென்று கணக்கிடலாம். இந்த ஏழைத்தேசத்தில் வருஷம் 100 கோடி ரூபாய் எவ்வளவு பெரிய நஷ்டம் என்று சொல்ல வேண்டுமோ ?

வினு :—நமது தேசத்தில் சாதாரணமாய் மதுபானம் எந்த வகுப்பாரிடையே பரவி யிருக்கிறது ?

விடை :—பெரும்பாலும் உழைத்துப் பாடுபட்டுப் பிழைக்கும் ஏழைத் தொழிலாளிகளிடையில்.

வினு :—மேற்சொன்ன 100 கோடி ரூபாயும் இந்த ஏழை எளியவர்களின் பணமா ?

விடை :—பெரும்பாலும் அவர்களுடைய பணந்தான்.

வினு :—பணக்காரர், படித்தவர்கள் முதலிய மேல்வகுப்பாரிடையே மதுபானம் கிடையாதா ?

விடை :—முன்னெல்லாம் அவ்வளவு கிடையாது. ஆனால் வெளி நாட்டு நாகரிகம் பரவுவதின் பயனுக இந்த வகுப்பாரிடையேயும் மது பானம் விரைவாகப் பரவி வருகிறது. இன்னும் கொஞ்ச காலத்திற்கு ஒன்றும் செய்யாதிருந்தால், இவர்களிடத்திலும் குடி ஏராளமாய்ப் பரவி விடும்.

* * * *

## 2

வினு :—இருக்கட்டும். குடியினுல் தேக சுகம் நஷ்டமாவதாகச் சொன்னீர்களே, அது என்ன ?

விடை :—ஆமாம். பெயர் பெற்ற டாக்டர்கள் பலர் குடியினுல் தேக சுகம் கெடுகிறதென்று அத்தாட்சி தந்திருக்கிருர்கள்.

வினு :—இவர்கள் இப்படிச் சொல்வதற்கு ஆதாரமென்ன ?

விடை :—நவீன பௌதிக ஞானத்தை உபயோகித்துப் பலவகை ஆராய்ச்சிகள் செய்து பார்த்து, மதுஸாரம் ஒருவித விஷம் என்று அவர் கள் முடிவு கட்டியிருக்கிருர்கள். நீண்டகால வைத்திய அநுபவத்தைக் கொண்டும் அவர்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கிருர்கள்.

வினு :—விஷம் என்ருல் மனிதர்களைக் கொல்லுமே? மதுஸாரம் யாரையாவது கொல்லுவதுண்டா ?

விடை :—விஷம் என்ருல் உடனே கொல்லுவதும் உண்டு, தாம தித்துக் கொல்லுவதும் உண்டு. வியாதிகள் உண்டாக்குவதுமுண்டு. அதிக குடியினுல் இரத்தம் கெட்டு எத்தனையோ பேர் இறந்து போகிருர்கள். இங்கிலாந்து தேசத்தில் வருஷத்தில் 60,000 பேர் மிதமிஞ்சிய குடியி னுல் செத்துப் போகிருர்கள் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. நமது தேசத்தில் அத்தகைய கணக்குகள் எடுத்தால் தெரியவரும்.

வினு :—கோடிக் கணக்காய்க் குடிகாரர்கள் இருக்கும்போது ஆயி ரக்கணக்கில் தானே குடியினுல் சாகிருர்கள் ? மற்றவர்களை அந்த விஷம் ஏன் ஒன்றும் செய்வதில்லை ?

விடை :—அப்படியன்று. மிதமிஞ்சிய குடியினுல் திடீரென்று சாகிறவர்களைப் பற்றியே மேலே சொன்னேம். மிதமாய்க் குடிக்கும் இன்னும் எத்தனையோ பேர் நாளடைவில் பலவகை நோய்களுக் கிரை யாகி இறந்து போகிருர்கள். அவர்களுடைய மரணத்துக்கு அந்தந்த நோய்கள் காரணமென்று சாதாரணமாய்க் கருதப்படுகிறது. ஆனல் உண்மையில் அவர்களுடைய மரணத்துக்கு மூல காரணம் மதுபானமே யாகும்.

வினு :—அதெப்படி ?

விடை :—எப்படியென்ருல், மதுஸாரம் மனிதர்களைப் பலவீனப் படுத்திவிடுகிறது. நோய்க் கிருமிகளை எதிர்த்து நிற்கும் ஜீவ சக்தியைக் குறைத்து விடுகிறது. இதனுல் குடிகாரர்கள் தொற்று நோய்களுக்கும் மற்ற நோய்களுக்கும் எளிதில் இரையாகிருர்கள். வெளிப்படையாக இவர்கள் அந்தந்த நோயினுல் இறந்துவிட்டதாய்க் காணப்படினும் உண்மையில் அவர்களைக் கொன்றது மதுஸாரமே.

வினு :—இதற்கு என்ன அத்தாட்சி ?

விடை :—இது பெயர் பெற்ற சீமை டாக்டர்களின் ஆராய்ச்சி முடிவு. மேலும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள், ஒரே நிலைமையிலுள்ளவர்களில் குடிகாரர்கள் 100 பேரையும், குடியாதவர்கள் 100 பேரையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் குடிகாரர்களை விடக் குடிப்பவர்கள் அதிக தேக சுகத்துடன் நீண்டகாலம் உயிர் வாழ்கிருர்களென்பதைப் பிரத்தியட்சமாய்ப் பார்க்கலாம்.

வினு :—ஆகவே மனிதர்களுக்கு வரும் நோய் நோக்காடுகளுக்கு மதுபானமும் ஒரு காரணம் என்று சொல்கிறீர்களா ?

விடை :—மதுபானத்தைப்போல் அவ்வளவு அதிகமான நோய்களுக்குக் காரணமாயிருப்பது வேறென்றும் கிடையாது.

வினு :—மதுபானத்தினுல் வரும் நோய்களுக்குச் சில உதாரணங்கள் சொல்லமுடியுமா ?

விடை :—க்ஷயம், பாரிசவாயு, வயிற்றுவலி, காக்கை வலிப்பு, இரத்தப்பை நோய்கள், பித்த ஈரல் வியாதிகள், வயிறுவீங்கல் முதலியவைகளுக்கு மதுபானம் ஒரு முக்கிய காரணமாகும்.

* * * *

### 3

வினு :—குடியினுல் உடம்புக்கு பலம் உண்டாகிறதென்றும், களைப்புத் தீருகிறதென்றும், தொழிலாளிகள் குடியாவிட்டால் நன்ருய் வேலை செய்யமாட்டார்களென்றும் சிலர் சொல்கிருர்களே ?

விடை :—இவையெல்லாம் முற்றும் தவருன எண்ணங்கள். குடித்தவுடன் போதை மயக்கத்தில் சற்று நேரம் களைப்புத் தோன்ருமலிருக்கலாம். ஆனுல் அவ்வளவுக்கவ்வளவு நாளடைவில் உடம்பு பலவீனமடைகிறது. நன்ருகக் கவனித்துப் பார்த்தால் தொழிலாளிகளுக்குள் குடிப்பவர்களை விடக் குடியாதவர்களே திடமான வேலை செய்யக் கூடியவர்கள் என்பது தெரியவரும்.

வினு :—சிலவகை ஒயின், பிராந்தி முதலியவைகள் உடம்புக்குப் புஷ்டிதரக் கூடியவை யென்றும், நோயாளிகளும் பலவீனர்களும் சாப்பிட வேண்டுமென்றும் பத்திரிகைகளில் விளம்பரங்கள் போடுகிறார்களே?

விடை :—இவையெல்லாம் முழுப் பொய். மது வியாபாரிகள் தங்கள் சொந்த லாபத்தைக் கருதிச்செய்யும் மோச விளம்பரங்கள்.

வினு :—பத்திரிகைகளில் அச்சடித்திருப்பதுங்கூடப் பொய்யா?

விடை :—அச்சு யந்திரத்தில் உண்மை, பொய் எதுவும் அச்சடிக்கலாம்.

* * * *

## 4

வினு :—மதுபானத்தினால் சன்மார்க்க நஷ்டம் எப்படி ஏற்படுகிறது?

விடை :—எல்லாவித துன்மார்க்கங்களுக்கும், குற்றங்களுக்கும், பாவங்களுக்கும் மதுபானமே மூலகாரணம்.

வினு :—இதற்கு ருசு என்ன?

விடை :—சர்க்கார் சிறைச்சாலைகளே ருசு. சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் குறைந்த பட்சம் 100-க்கு 75 பேர் அங்கே வருவதற்குக் குடியே நேர் காரணமாகவோ, மூல காரணமாகவோ இருந்திருக்கும்.

வினு :—நேர் காரணமாவது எப்படி?

விடை :—சிறைச் சாலைகளில் உள்ளவர்களில் பெரும்பாலோர் கொலை, கலகம் என்னும் குற்றங்களுக்காகவாவது, திருட்டுக் குற்றத்துக்காகவாவது அங்கு வந்தவர்களா யிருப்பார்கள். கொலை, கலகம் இவைகளுக்கு மதுபானம் நேர் காரணமாகும். அடிதடி சண்டைகளுக்கு ஆள் வேண்டுமானால் கள்ளு ஊற்றி ஆள் சேர்ப்பது சாதாரணம். சாதுவான ஜனங்கள் கள்ளு, சாராயக் கடைகளுக்கு அருகில் போகவே பயப்படுவார்கள். குடித்தவர்கள் துன்மார்க்கமாக நடந்து கொள்ளுவார்கள் என்று எல்லாருக்குமே தெரியும்.

வினு :—மது குற்றங்களுக்கு மூல காரணமாவதெப்படி?

விடை :—திருட்டுக் குற்றத்துக்காகச் சிறைச் சாலைக்கு வருவோர் பெரும்பாலும் வறுமை காரணமாகவே அக்குற்றம் செய்கிறார்கள். எற்கனவே ஏழைகளாயுள்ளவர்களை மதுபானம் இன்னும் அதிக வறுமையில் வீழ்த்துகிறது என்று முன்னமே சொல்லி யிருக்கிறோம். இவ்வாறு, குடி ஜனங்களைச் சிறைச் சாலைகளுக்கு அனுப்பும் மூல காரணங்களில் ஒன்றாகிறது. விபசாரத்திற்கும் குடியே அநேகமாய்க் காரணம். மதுபானம் செய்பவனுக்குத் தன் மனதில் உண்டாகும் இச்சையைத் தடுத்துக் கொள்ள முடியாது. விபசாரத்தால் உண்டாகும் குற்றங்கள் பல.

வினு :—இவையெல்லாம் உத்தேசமாய்ச் சொல்கிறீர்களா? தகுந்த அத்தாட்சி உண்டா?

விடை :—நாம் சொல்வதல்ல; நீதிபதிகள், மாஜிஸ்ட்ரேட்டுகள், சிறைச்சாலைத் தலைவர்கள் முதலியோர் அநுபவத்தின்பேரிலும் ஆராய்ச்சியின் பேரிலும் நிச்சயம் செய்திருக்கும் உண்மை.

வினு :—அவர்களில் சில பிரமுகர்களின் அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டமுடியுமா?

விடை :—ஸர் ஆண்ட்ரூ ரீட் என்பவர், "மிதமிஞ்சிக் குடிப்பவர்களைக் கீழ்க் கோர்ட்டுகளிலேயே தக்க தண்டனை விதித்துச் சீர்திருத்த வேண்டும். இல்லாவிடில் அவர்களைத் தூக்கு மேடையில் சீர்திருத்த வேண்டியதாய் முடியும்" என்ருர்.

இங்கிலாந்து தேசத்தின் தலைமை நீதிபதி, "மதுபானம் இல்லாவிட்டால் நமது சிறைச்சாலைகளில் பத்தில் ஒன்பது சிறைகளை மூடிவிடலாம்" என்று கூறினுர்.

நீதிபதி ஹாகின்ஸ், "அநேகமாகக் குற்றங்கள் எல்லாவற்றிற்கும் குடியே காரணம் என்று நான் முடிவு செய்திருக்கிறேன். எவ்வளவுக்கு இதைப்பற்றி நான் சிந்திக்கிறேனே அவ்வளவுக்கு இந்த அபிப்பிராயம் உறுதிப்படுகிறது.......இந்த தேசத்தில் நடக்கும் குற்றங்களில் 100-க்கு 90 குற்றங்களுக்குக் கள்ளு, சாராயக் கடைகளிலேயே விதைபோடப்படுகிறதென நான் நம்புகிறேன்" என்று சொன்னுர்.

இங்கிலாந்தின் உள்நாட்டு மந்திரியாயிருந்த லார்ட் ரிச்சி என்பவர் 100-க்கு 80 குற்றங்களுக்கு மூலகாரணம் மதுபானமே என்று சொல்லியிருக்கிருர்.

ஸர் வில்லியம் ஹார்க்கோர்ட் என்னும் மந்திரி, தமது அநுபவத்தைக்கொண்டு, தூக்குமேடைக்கு ஆறு குற்றவாளிகள் போனுல் அவர்களில் ஐந்து பேர் குடியினுல் கொலை செய்தவர்களா யிருப்பார்களென்று தெரிவித்தார்.

நமது தேசத்திலும் குடியைப்பற்றி விசாரணை நடத்தினுல் நீதிபதிகள் முதலியோர் இத்தகைய அபிப்பிராயமே தெரிவிப்பார்கள்.

---

பின்வரும் புதிய வாய்ப்பாட்டை உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள் :—

ஒரு குடியன் = ஒரு புட்டி
இரண்டு புட்டி = ஒரு சண்டை
ஒரு சண்டை = இரண்டு போலீஸ்காரன்
இரண்டு போலீஸ்காரன் = ஒரு மாஜிஸ்ட்ரேட்
ஒரு மாஜிஸ்ட்ரேட் = ஆறு மாதம் ஜெயில்

# மிராசுதார் சுந்தரப்பையர்

[க. ச.]

[கோரடாச்சேரிக்கடுத்த ஒரு கிராமம். சுந்தரப்பையர் மிராசுதார். 10 வேலி நிலம். வருஷ வருமானம் ரூ 1500. வருஷாந்தர செலவு ரூ 2000. கடன் ரூ 15,000. இதற்கு வட்டி ஞூ 1க்கு ரூ 1800. அவர் மனைவி மீனாக்ஷி உடம்பின்மேல் நகை ரூ. 3000. வீட்டில் வெள்ளிப் பாத்திரம் ரூ 1000.]

மீனாக்ஷி: பத்திரிகையில் என்ன அவ்வளவு விசேஷம்? காபி ஆறிப் போகிறதே?

சுந்த: நம் குடி கெட்டுப்போச்சு. ஊரே அழிந்து போய் விடும். காந்தி பேச்சைக் கேளாதீர்களென்று நான் அப்பொழுதே எச்சரிக்கை செய்தேன். ஊர்ப் பயல்கள் எல்லாரும் குதித்தார்கள். இப்பொழுது எல்லாரும் ஊரை விட்டு ஓடவேண்டியது தான்.

மீனாக்ஷி: சமாசாரம் என்னவென்று முதலில் சொல்லுங்கள்.

சுந்த: நேற்று இந்திய சட்ட சபையில் மதுவிலக்குச் சட்டம் பாஸாய் விட்டது. இந்த வருஷம் ஏப்பிரல்மீ முதல் அமுலுக்கு வந்து விடப் போகிறதாம்.

மீனாக்ஷி: அதனால் நமக்கு என்ன கெடுதல்?

சுந்த: உன் புத்தி அவ்வளவு தான். வருஷந்தோறும் கள்ளுக் குத்தகையில் நமக்கு ரூ. 250 வருவது தெரியாதா? வயலுக்கு வெள்ளம் காய்ச்சல் உண்டு. நெல் விலை ஏறும் இறங்கும். ஆனால் இந்த 250 ரூபாயும் வருஷம் முதல் தேதியில் "டன்" என்று வந்து கொண்டிருந்தது. வாயிதாவிற்கு முடையில்லாமல் இருந்தது. இனிமேல் செட்டி வாசலில் போய் நிற்கவேண்டியது தான்.

மீனாக்ஷி: சட்ட சபையி லிருப்பவர்களுக் கெல்லாம் நிலம் கிடையாதா என்ன? அவர்கள் ஏன் இந்த சட்டத்தைச் செய்தார்கள்?

சுந்த: ஏதோ ஏழைகளுக்கு நல்லதாம். தெனாலிராமன் கதையைப் போல் கறுப்பு நாயை வெள்ளை நாயாக்கப் போகிறார்களாம். பறையர்களைப் பிராமணர்களாக்கப் போகிறார்களாம். அதிகமாகச் சொல்வதில் பயனென்ன? இதெல்லாம் அனர்த்தத்திற்குத்தான்.

* * * *

[10 வருஷத்திற்குப் பின்னல். சுந்தரப்பையர் கடன் தீர்ந்து கையில் ரொக்கம் ரூ 10,000. நிலத்தில் வருமானம் ரூ 3000.]

சுந்த : மீனுக்ஷி, நாளைக்கு நல்ல முதல் தரமான விருந்து செய்ய வேண்டும். பத்து நண்பர்கள் சாப்பிடுவார்கள். சாயங்காலம் கூட்டத்துக்கு நீயும் வரவேண்டும்.

மீனுக்ஷி : என்ன விசேஷம்? இரண்டு நாள் முன்னதாகவே சொல்லக்கூடாதா?

சுந்த : மறந்து போய் விட்டேன். நாளைக்கு மதுவிலக்குச் சட்டத்தின் 10-வது வருஷ முடிவு.

மீனுக்ஷி : அதை நாம் ஏன் கொண்டாடவேண்டும்? அதனல் நமக்கு நஷ்டம் தானே?

சுந்த : அப்படியல்ல, நானும் முதலில் அந்த சட்டத்தினல் மிராசு தார்களுக்கெல்லாம் அதிக நஷ்டமென்றுதான் நினைத்தேன். ஆனல், சட்டம் ஏற்படுத்தி, 2, 3 வருஷத்திற்குள்ளேயே அதன் உண்மை வெளியாகிவிட்டது. அதன் பலனுக ரூ 1500 வந்த நிலத்தில் ரூ 3000 குத்தகையில் வருகிறது. நம்முடைய கடனெல்லாம் போய் ரூ. 10,000 கையில் இருக்கிறது. இதற்கெல்லாம் அந்த சட்டந் தான் மூலம்.

மீனுக்ஷி : மிகவும் ஆச்சரியமா யிருக்கிறதே! இதெப்படி யென்று விவரமாகச் சொன்னல் தான் புரியும்.

சுந்த : மதுவிலக்குச் சட்டத்திற்கு முன் நம்முடைய குடியானவர்களும், பண்ணையாள்களும் ஒரு காசும் மிச்சம் பிடித்ததில்லை. பண்ணையாட்களின் அவஸ்தை வருஷா வருஷம் ஏறி வந்தது. தாங்கமுடியாமற் போனதும் அவர்கள் கண்டிக்கு ஓடிப்போய் விடுவார்கள். குடியானவர்கள் சரியாகக் குத்தகை கொடுத்ததில்லை. அவர்கள் மாட்டுக்கு நல்ல தீனி போடுவதில்லை. வருஷா வருஷம் புது மாடு வாங்குவதற்குக் கடன் கொடுக்க வேண்டியிருந்தது.

மதுவிலக்குச் சட்டம் வந்தது முதல் வீட்டிற்கு வருஷம் 40, 50 ரூ. மிச்சமாகி விட்டது. ஒவ்வொரு குடியானவனும் தன் சொந்த மாடு கன்று வைத்துக்கொண்டு அவைகளை நன்ருகப் பார்க்க ஆரம்பித்தான். குடியிருப்பு மனைகளுக்கு கிராக்கி ஏற்பட்டது. கண்டிக்கு ஓடுவதை நிறுத்தி விட்டார்கள். நிலத்திற்குப் போட்டி வந்தது. ஏகராவிற்கு 15 கலம் கொடுத்தவர்கள் 25 கலம் கொடுக்க முன் வந்தார்கள். வருஷக் கடைசியில் பாக்கியும் வைத்துக்கொள்வதில்லை. இதைத் தவிர அநேக ஜில்லாக்களில் முன் சோளம் மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள், அரிசி வாங்க ஆரம்பித்தார்கள். அதனல் நெல் விலையும் கொஞ்சம் உயர்ந்தது. இதெல்லாம் கூடி நம்மைப்போல் கடனில் மூழ்கி யிருந்த மிராசுதார்களை யெல்லாம் காப்பாற்றி விட்டது.

மீனாக்ஷி: எவ்வளவு ஆனந்தமா யிருக்கிறது. ஏழைகளின் துக்கத்தினால் ரூ. 250 லாப மடைவது போய் அவர்கள் சுகத்தினால் ரூ. 2500 பெறுவது எவ்வளவு மேன்மை? இதெல்லாம் காந்தியால் தானே வந்தது? ' அவருடைய படம் கூட நம்மாத்தில் இல்லையே? எல்லாரும் வைத்திருக்கிறார்களே.

சுந்த: நல்ல வேளையாக ஞாபக மூட்டினாய். இன்றைக்கே சென்னைக்குத் தந்தி யடிக்கிறேன். நாளைத் தபாலில் வந்து விடும்.

---

## ஆயுள் பாங்கிக்காரர்கள் அனுபவம்

ஆயுள் பணம் கொடுக்கும் பாங்கிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஒருவன் மாதம் மாதம் அல்லது வருஷம் இரு முறை கொஞ்சம் பணம் தவறாமல் கட்டி வரவேண்டும். அப்படிக் கட்டி வந்தால் பிறகு எக்காரணத்தினாலாவது மரணம் வந்தவுடன் அவன் மனைவி மக்களுக்குப் பெரிய தொகை கொடுக்கப்படும். ஒருவன் அநேக வருஷங்கள் பிழைத்திருந்து கட்டணம் கட்டிவந்தால் பாங்கிக்காரர்களுக்கு லாபம். ஆனால் வியாதியினாலாவது வேறு காரணத்தாலாவது அகால மரணம் எற்பட்டால் குறித்த முழுத் தொகையையும் பாங்கிக்காரர்கள் கொடுத்து விடுவார்கள்: இறந்தவன் குடும்பத்திற்கு லாபம். ஒப்பந்தம் செய்யும் காலத்தில் வைத்தியர்களைக் கொண்டு கட்டணம் கட்டுகிறவனுடைய தேக நிலையைச் சோதனை செய்து பார்த்துக் கொள்ளுவார்கள். அதற்குத் தகுந்தபடி கட்டணம் விதிப்பார்கள். இத்தகைய ஆயுள் பாங்கிகளுக்கு மதுபானத்தினால் உண்டாகும் தீங்கு நன்றாய்த் தெரியும். குடிப்பவர்களுக்கு சில வியாதிகள் சம்பவிக்கும் என்று அவர்கள் கணக்கு எடுத்திருக்கிறார்கள். மூத்திர வியாதிகள் கள்ளு சாராயம் குடிப்பவர்களுக்கு சாதாரணமாய் சம்பவிக்கும். போதை உண்டாகாமல் மிதமாய்க் குடிப்பவர்களுக்குங்கூட ஈரல் வியாதி எளிதில் சம்பவிக்கும். பாரிச வியாதி, மார்பு வியாதிகள், இரத்தம் படபடவென்று அடித்துக்கொண்டு திடீர் என்று உயிர் போகும் வியாதி முதலியவைகள் எல்லாம் குடிப்பவர்களுக்கு சம்பவிக்கும். வியாதிகள் அநேகமாய் விஷக்கிருமிகளினால் வரும். இந்தக் கிருமிகளின் விஷத்தைத் தடுக்க உடலின் இரத்தத்தில் சில அணுக்கள் இருக்கின்றன. இவை தான் மனிதன் ஆரோக்கியத்திற்குக் காவற்படை. மதுபானத்தால் இந்த காவற்படையின் பலம் குறைந்து போகிறது. ஆயுள் பாங்கிக்காரர்கள் இத்தகைய காரணங்களினால்தான் குடிப்பவர்களிடம் அதிக கட்டணம் கேட்கிறார்கள்.

---




## திருட்டுக்கள்ளும் பகிரங்கக்கள்ளும் எதனால் அதிக நஷ்டம்?

திருட்டுக்கள்ளு ஒருவர் இருவர் குடிக்கலாம். இது கூடாது என்பதற்காக பகிரங்கமாய்க் கள்ளும் சாராயமும் எல்லாரும் எங்கேயும் குடிக்கும்படி செய்யலாமா? மேலேயுள்ள சிறு வட்டத்தில் திருட்டுக்கள்ளு குடிக்கும் படம் காணலாம். மற்றவை பகிரங்க மதுபானம். நாட்டுக்கு எது அதிக நஷ்டம்?

# அரசூர் பஞ்சாயத்து

[ரா. கி.]

அபிராமி, அரசூர் சின்னசாமிப் படையாச்சியின் மூத்த தாரத்து மகள். சின்னசாமிப் படையாச்சி கொஞ்சம் சொத்துக்காரன். ஆகையால் முதல் தாரம் செத்துப்போனதும் இரண்டாவது மனைவி கலியாணம் செய்து கொண்டான். இவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. கொஞ்ச காலத்துக்கெல்லாம் சின்னசாமிப் படையாச்சி இறந்து போனான். அப்போது அபிராமிக்கு வயது பதினாலு.

காமாட்சி—இதுதான் சிறிய தாயார் பெயர்—அபிராமியைப் பிரியமாய் வளர்த்து வந்தாள். அபிராமி பார்வைக்கு லக்ஷணமா யிருப்பாள். பள்ளிக்கூடத்தில் நாலாவது வரையில் படித்திருந்தாள். அவளைத் தன் தம்பி வைத்திலிங்கத்துக்குக் கலியாணம் செய்து வைக்கவேண்டுமென்று காமாட்சிக்கு ஆசை.

அபிராமிக்குச் சொந்தத் தாய் மாமனின் மகன் சந்திரகாசன். அபிராமியும் அவனும் குழந்தைப் பிராயம் முதல் கூடி விளையாடியவர்கள். அபிராமியின் தாயார் உயிர் வாழ்ந்தபோது சந்திரகாசு சில சமயம் அரசூருக்கு வருவான். சில சமயம் அபிராமி சேமங்கலத்திற்குப் போவாள். அப்போதிருந்தே அபிராமியைச் சந்திரகாசனுக்குக் கொடுப்பதாகப் பேசி வந்தார்கள். அபிராமியின் தாயார் அடிக்கடி இதைப் பற்றிச் சொல்லுவாள். குழந்தைக்குப் பல் முளைப்பதற்கு முன்னிருந்து,—என்? சில சமயம் கர்ப்பத்திலிருக்கும் போதே—கலியாணப் பேச்சு பேசுவது வழக்கமல்லவா?

வெகு நாளாகப் பழகி நேசங்கொண்ட சந்திரகாசனைத்தான் கலியாணம் செய்து கொள்வேனென்று அபிராமி பிடிவாதம் பிடித்தாள். வைத்திலிங்கம் அவளுக்குத் திருட்டுத்தாலி கட்டிவிட எண்ணினான். ஆனால் காமாட்சி இதற்கிடங் கொடுக்கவில்லை. அவள் அபிராமிக்கு எவ்வளவோ போதனை செய்து பார்த்தாள். ஒன்றும் பயன் படாமற் போகவே கடைசியில் அவள் சொன்னதாவது:—“நல்லது; உன் இஷ்டப்படியே செய். உன் மாமன் மகனையே கட்டிக்கொள். உங்கப்பனை உத்தேசித்துக் கலியாணம் மட்டும் செய்து கொடுத்து விடுகிறேன். அதற்குப் பிறகு இந்த வீட்டுவழி நீ அடி எடுத்து வைக்கக் கூடாது. செருப்பாலடித்த சல்லி கூடக் கொடுக்கமாட்டேன். அப்புறம் என்மீது குறைப்படாதே. சந்திரகாசு கள்ளுக் குடிக்கிறான் என்று சொல்கிறார்கள். அவனுக்குச் சொத்து

கிடையாது. ஓட்டைக் குச்சு வீடுதான் ஆஸ்தி. யோசித்து முடிவுசெய்" என்றாள்.

அரசூரில் பாதிப்பேருக்குமேல் குடிப்பவர்கள். ஆகையால் சந்திர காசு கள்ளுக்குடிப்பது அபிராமிக்குப் பெருங்குற்றமாகத் தோன்றவில்லை. இருந்தாலும் அவளுக்குக் கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருந்தது. இந்தக் குற்றம் அவன்மீது சிறிய தாயார் சொல்லும் படியாயிற்றே என் றெண்ணினாள். 'குடிக்காமலிருந்தால் நன்றாகத்தான் இருக்கும். எப்படியும் கலியாணம் ஆகிவிட்டால் குடியை விடும்படி செய்து விடலாம்' என்று நினைத்தாள். கலியாணம் ஆயிற்று.

* * * *

அபிராமி மிகவும் மானி. சிற்றன்னையின் வார்த்தை அவள் மனதில் நன்றாய்ப் பதிந்திருந்தது. கலியாணத்திற்குப் பிறகு அவள் தன் பிறந்த கத்தை எட்டிப் பார்க்கவே யில்லை. தம்பியின் கலியாணத்திற்கு மட்டும் ஒரே ஒரு தடவை போனாள். அப்போது அவளுக்கு ஒரு பட்டுச்சேலை கொடுத்தார்கள். கலியாணத்தன்று மாத்திரம் அதை உடுத்திக்கொண்டு உடனே திருப்பிக் கொடுத்து விட்டாள். தம்பியும், சிறிய தாயாரும் எவ்வளவோ கெஞ்சியும் அவள் அதைத் தன்னுடன் எடுத்துவரவில்லை.

அவர்களுடைய வாழ்க்கை கூடியவரை சந்தோஷமாகவே இருந்து வந்தது. சந்திரகாசு ஒரு ஏர் பயிர்ச் செலவு செய்துவந்தான். சாகுபடி இல்லாத காலத்தில் கூலி வேலைக்குப் போவான். ஏதோ அரை வயிற் றுக் கஞ்சிக்குக் கிடைத்துவந்தது. ஏழை வீட்டில் பிறந்த அவன் பள்ளிக் கூடம் போனதில்லை. அபிராமியின் சகவாசத்தால் அவனுக்கு இப்போது படிப்பில் ருசி உண்டாயிற்று. கொஞ்சகாலம் இரவுப் பள்ளிக்கூடத்துக் குப்போய் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டான். அபிராமியும் சில சமயம் தெரிந்த வரையில் சொல்லிக் கொடுத்தாள். கள்ளுக்கடை ஒன்று தான் அவர்கள் சந்தோஷத்திற்குத் தடையா யிருந்தது.

ஆனமட்டும் முயன்றும் சந்திரகாசுவினால் குடியை நிறுத்த முடிய வில்லை. சில சமயம் ஒரு வாரம் இரண்டு வாரம் பல்லைக் கடித்துக் கொண்டிருப்பான். அப்புறம் ஒரு நாள் புத்தி பேதலித்து விடும். ஆயி னும் அவன் பெருங் குடிகார னாகவில்லை. அபிராமியின் அன்பு அவனை அடியோடு படுகுழியில் விழாமல் காப்பாற்றி வந்தது.

பிறகு அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. அன்றுமுதல் சந்திரகாசு குடியை எப்படி விடுவது, பணம் எப்படிச் சேர்ப்பது என்று ஓயாமல் சிந் தித்து வந்தான். ஒருநாள் முருகப்பக் கங்காணி சேமங்கலத்துக்கு வந்த தும் பினாங்குக்குப் போவதுதான் வழியென்று தீர்மானித்துவிட்டான்.

* * * *

இரவு பன்னிரண்டு மணி. இன்பமான வெண்ணிலவு. சந்திரகாசுவும் அவன் மனைவி அபிராமியும் வீதியில் விரித்திருந்த ஒரு பழம் பாயில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் மத்தியில் இன்னும் ஒரு வயது நிரம்பாத அவர்கள் குழந்தை பாயில் தூங்கிக் கொண்டிருந்தது. நெற்றியில் தொங்கிய சுருட்டை மயிர் இளங்காற்றில் சிறிது அசைந்தாடிற்று. குடிசைத் திண்ணையில் கிழவி, சந்திரகாசுவின் தாயார், படுத்துப் பெருங் குரட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

"எப்படியாவது பல்லைக் கடித்துக் கொண்டு இரண்டு வருஷம் பொறுத்திரு. உன்னையும் குழந்தையையும் விட்டு விட்டு நான் ரொம்ப நாள் இருப்பேனா? கையில் ரூபாய் சேர்ந்ததோ இல்லையோ, ஓடிவந்து விடுகிறேன்" என்றான் சந்திரகாசு.

"ஐயோ! அதெல்லாம் முடியாது. நமக்குப் பணமும் வேண்டாம்; எதுவும் வேண்டாம். ஏதோ நாலு காசு நீ சம்பாதித்து வருவதே போதும். கூழோ கஞ்சியோ குடித்து விட்டுச் சிவனே என்று இருப்போம்" என்றாள் அபிராமி.

"இது தான் பெண் பிள்ளை புத்தி. கொஞ்ச நாள் கஷ்டப்பட்டால் பின்னால் எப்போதும் சுகமாய் இருக்கலாமென்பது உனக்குத் தெரியவில்லையே" என்றான் சந்திரகாசு.

"நீ மாத்திரம் புத்தியாய்ப் பேசுகிறாயா? நீ அக்கரைச் சீமைக்குப் போய்ப் பணந்தேடி வருவது என்ன நிச்சயம்? அக்கரைச் சீமை போனவர்கள் எத்தனையோ பேர் திரும்பி வருவதே இல்லை" என்று அபிராமி சொன்னாள்.

சந்திரகாசு சிரித்தான். அன்று மாலை முழுதும் அவன் கங்காணியிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டுத் திரும்பி வந்தபடியால் அபிராமியின் பேச்சைக்கேட்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"முருகப்பக் கங்காணிக்கு இப்பொழுது ஒரு லட்ச ரூபாய் சொத்திருக்கிறது. அவன் பினங்குக்குப் போனபோது கையில் ஓட்டாஞ்சல்லிகூடக் கிடையாது" என்றான்.

"எனிப்படிப் பணம் பணமென்று அடித்துக் கொள்கிறாய்? இந்தக் குஞ்சானின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதாதா?" என்று சொல்லி அபிராமி தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் கன்னத்தில் முத்தம் கொடுத்தாள்.

ரோஜா மொட்டொன்று திடீரென வெடித்து மலர்ந்தாற்போல அப்போது குழந்தையின் இதழ்கள் சற்றே விரிந்து புன்னகை பூத்தது. கண்மட்டும் திறக்கவில்லை. பின்னர் மறுபடியும் அதன் இதழ்கள் குவிந்

தன. தூக்கத்திலும் கூடத்தாயின் அன்பு அதற்கு மகிழ்வூட்டியதோ? அல்லது ஏதேனும் இன்பக்கனவு கண்டதோ? யார் கண்டார்கள்?

"இவனுக்காகத்தான் நான் போகவேண்டு மென்கிறேன். நீயும் நானு மட்டுமானல் கவலேயில்லே. கிழவி இரண்டொரு வருஷத்துக்கு மேல் இருக்கமாட்டாள். ஆனல் குழந்தையை நினைத்தால் தான் எனக்குப் பணம் சேர்க்கும் ஆசை யுண்டாகிறது. ஐந்து வயதில் நான் மாடு மேய்த்தது போல் இவனையும் மாடு மேய்க்கவிடப் போகிறேமா? பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேண்டாமா? சொக்காய் குல்லாய் வாங்கிக் கொடுக்க வேண்டாமா? பார், இப்பொழுது கூட இவன் கைக்குத் தங்கக் காப்பு செய்து போட்டால் எவ்வளவு நன்ருயிருக்கும்?" என்ருன் சந்திரகாசு.

"நீ கள்ளுக்குடிக்கிற காசை என்னிடம் கொடு. நாலு மாதத்தில் குழந்தைக்குத் தங்கக்காப்பு அடித்துப் போடுகிறேன்" என்ருள் அபிராமி.

சந்திர காசுவுக்குக் கண்ணில் நீர் ததும்பியது. அவன் சொன்னதாவது:—"இந்த மாதிரி நீ எத்தனையோ தடவை சொல்லியாகிவிட்டது. நானும் எவ்வளவோ பார்க்கிறேன். என்னல் முடியவில்லே. கள்ளுக் கடையைக் கண்டதும் வெறி வந்து விடுகிறது. ஊரைவிட்டுப் போனல் தான் இந்த வெறி போகும். இரண்டு வருஷம் கண்காணுமல் இருந்தால் மறந்து போய்விடும். அதற்காகவே முக்கியமாய் நான் போக வேண்டும்."

"அங்கே மாத்திரம் கள்ளுக்கடை கிடையாதா?" என்று அபிராமி கேட்டாள்.

"அதெப்படி அங்கே கள்ளுக்கடை யிருக்கும்? இருக்காது" என்ருன் சந்திரகாசு. பாவம்! போகு மிடத்திலும் பீர் கடையும் பிராந்தி கடையு மிருக்கு மென்னும் எண்ணம் அவனுக்கு இதுவரை தோன்றவில்லே. மறு நாள் கங்காணியைக் கேட்டு நிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டுமென்று நினைத்தான். ஆனல் மறு நாள் பிரயாண தடபுடலில் மறந்து போனன்.

"எப்படியானலும் நீ போகக்கூடாது. உன்னைப் பிரிந்து நான் இருக்கமாட்டேன். அப்படி என்ன பிரமாதமாகக் குடித்துவிடுகிருய்? போனல் போகட்டும். நீ சம்பாதிக்கும் பணம்தானே? ஆறு அணு சம்பாதித்தால் இரண்டு அணுவுக்குக் குடிக்கிருய். தை மாதம் பத்துப் பதினைந்து கலம் நெல் வருகிறது. இப்போது நாம் பட்டினியா கிடக்கிறேம்? இனிமேல் நானும் கூலி வேலேக்குப் போகிறேன்" என்ருள்.

"இப்படி யெல்லாம் பேசாதே அபிராமி! நீ பிறர் வீட்டில் நெல் லுக் குத்தப் போவதை நான் பார்த்துக்கொண்டிருப்பேனு? எல்லாம் முடி வாகிவிட்டது. மாட்டை இன்று விற்று விட்டேன்; 80 ரூபாய்க்கு. 50 ரூபாய் வழிச்செலவுக்கு எடுத்துக்கொண்டு உனக்கு 30 ரூபாய் கொடுத்துவிட்டுப் போகிறேன். நாலு மாதத்திற்குக் குதிரில் நெல் இருக்கிறது. அதற்குள் கட்டாயம் பணம் அனுப்புகிறேன். இந்தக் குழந்தையின் முகத்தைப்பார்த்து எனக்குப்போக உத்திரவு கொடு. தடை செய்யாதே" என்முன் சந்திரகாசு.

"அப்படியானல் நானும் வருகிறேன். குழந்தையையும் எடுத்துக் கொண்டு இரண்டு பேரும் போவோம்" என்முள் மனைவி.

"கிழவியை என்ன செய்வது? சோற்றுக்கு ஆலாய்ப் பறக்க விட்டு விடலாமா?" என்று சந்திரகாசு கேட்டான்.

"ஐயோ! எனக்கு அழுகை வருகிறது" என்முள் அபிராமி. அப் படியே அழத் தொடங்கினுள். சந்திரகாசன் வெகு நேரம் அவளை சமா தானம் செய்து கொண்டிருந்தான்.

* * * *

சந்திரகாசு பினங்குக்குப் புறப்பட்டுச் சென்ற நான்காவது மாதத் தில் அபிராமிக்கு ஒரு கடிதம் வந்தது. தபால்காரன் கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு இரண்டணு கேட்டான். அபிராமி வீட் டிற்குள் ஓட்டமாயோடி பழைய பெட்டியொன்றில் துளாவி இரண்டணு எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தாள். கடிதத்தை வாங்கி உடைத்துப் படித்தாள். அதிலே சந்திரகாசன் எழுதியிருந்த அன்பான மொழிகளை யும், பிரியமான வசனங்களையும் அவன் எங்கே தான் கற்றுக்கொண் டானே தெரியாது. ஒவ்வொரு வரி படிக்கும்போதும் அபிராமிக்கு மயிர்க்கூச்சல் எறிந்தது. நாலு வரி படித்துவிட்டு அவள் அழுதாள். இன்னும் நாலு வரி படித்துவிட்டுச் சிரித்தாள். இடையிடையே கடி தத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். இரண்டு மூன்று தடவை படித்தாள். பிறகு அதைக் கிழவியிடம் கொண்டுபோய்ப் படித்துக் காட் டினுள். மறுபடி குழந்தையின் பக்கத்தில் உட்கார்ந்து கடிதம் முழுதை யும் அதற்குப் படித்துக்காட்டினுள். குழந்தையும் ஏனே சிரித்தது. அதன் முகத்தில் கடிதத்தை வைத்து முத்தமிடச் செய்தாள். கடைசி யாகப் பெட்டியில் பத்திரமாக வைத்துப் பூட்டினுள்.

இரண்டு மாதங்கழித்து இன்னெரு கடிதம் வந்தது. அடுத்த மாதம் கட்டாயம் பணம் அனுப்புவதாக அதில் எழுதியிருந்தது. பின்னர் இரண்டுமாதங் கழித்து வந்த கடிதத்திலும் இப்படியே எழுதியிருந்தது. இதற்குள், குதிரில் இருந்த நெல்லெல்லாம் தீர்ந்து போயிற்று. பணத்திலும் பத்துரூபாய் செலவழிந்து விட்டது. பாக்கி ரூ 20-ம்

ஆபத்துக்கு வேண்டுமென்று அபிராமி பத்திரப்படுத்திவிட்டுக் கூலி வேலை செய்ய ஆரம்பித்தாள். நெல்லுக்குத்தவும், களை யெடுக்கவும் போனுள். அந்த நேரங்களில் கிழவி குழந்தையைப் பார்த்துக்கொண் டிருந்தாள்.

இப்படியே ஒன்றரை வருஷகாலம் சென்றது. இரண்டு மாதத் திற் கொருமுறை சந்திரகாசு விடமிருந்து தவருமல் கடிதம் வந்து கொண்டிருந்தது. ஆனும் பணம் மட்டும் ஒரு தம்பிடி கூட வந்த பாடில்லை. அபிராமிக்கு மிகவும் ஆச்சரியமா யிருந்தது. பகலெல் லாம் வெளியிலும், இரவில் வீட்டிலும் உழைத்து உழைத்து அவள் அலுத்துப்போயிருந்தாள். வெகு நாளாய் 'அனுப்புகிறேன், அனுப்பு கிறேன்' என்று தன் புருஷன் ஆசை காட்டி வரும் பணம், உண்மையில் எப்போதுதான் வந்து சேருமோவென்று அவள் ஏக்கப்படலானுள். தபால் காரனைக் கண்டபோதெல்லாம் விசாரித்தாள். ஆனல் அவள் சந் திரகாசனுக்கு எழுதிய கடிதங்களில் இந்த ஆவலை அதிகம் வெளிக்காட்ட வில்லை. கடைசியாக எழுதிய ஒரு கடிதத்தில் பணம் வந்துசேரவில்லை யென்றும், மணியார்டர் தப்பிப்போயிருக்குமோ வென்று சந்தேகப்படுவ தாகவும், ஒரு வேளை இதுவரை அனுப்பியிராவிட்டால் தெரிவிக்க வேண்டுமென்றும், கொஞ்சம் பணம் வந்தால் குழந்தைக்கும் கிழவிக்கும் சௌகரியமாய்த்தான் இருக்குமென்றும் அவள் எழுதினுள்.

இதற்குச் சந்திரகாசுவிட மிருந்து வந்த பதிலைப் படித்ததும் அபி ராமி இடிவிழுந்தது போல் திடுக்கிட்டுப் போனுள். அவன் எழுதியிருந் தான் :—"உன்னிடம் இத்தனை காலமாய் ஒரு விஷயம் மறைத்து வைத்திருந்தேன். இனிமேல் சொல்லாமலிருக்கக் கூடாது. நான் கிளம்பிய வன்றைக்கு முதல்நாளிரவு நாம் நிலவில் உட்கார்ந்து பேசியது நினைவிலிருக்கிறதா ? முக்கியமாக, கள்ளுக்கடையை மறப்பதற்குத்தான் நான் அக்கரைச் சீமைக்குப் போவதாகச் சொன்னேன். இங்கே கடை இராதென்று நினைத்தேன். ஐயோ ! ஏமாந்து போனேன். அந்தப் பாழும் கடைகள் இங்கேயும் இருக்கின்றன. சம்பளம் அதிகம் தான் கொடுக்கிருர்கள். ஆனல் சாப்பாடுபோக மிச்சமெல்லாம் குடிக்குத் தான் போகிறது. ஊரிலாவது எனக்குப் புத்தி சொல்லித் தடுக்க நீ இருந்தாய். இங்கே நீயும் இல்லை. அப்படியும் எவ்வளவோ கஷ்டப் பட்டு முப்பது வெள்ளி சேர்த்து உனக்கு அனுப்பலாமென்று வைத்திருந் தேன். பத்து நாட்களுக்கு முன்பு நான் குடித்துவிட்டுப் புத்தி தப்பி யிருக்கையில் யாரோ பாவிகள் அதைக் கொண்டு போய்விட்டார்கள். ஐயோ ! நீங்கள் அங்கே படும் கஷ்டத்தை நினைத்தால் வயிறு பகீரென் கிறது. ஒவ்வொரு நாளும் உங்கள் நினைவாகவே யிருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் எப்படியும் பணம் அனுப்புகிறேன்."

அபிராமி அன்று இரவெல்லாம் தூங்கவே இல்லை. ஓயாமல் அழுது கொண்டே யிருந்தாள். புருஷன் பத்திரமாய் ஊர் வந்து சேரவேண்டு மென்று தெய்வங்களை யெல்லாம் வேண்டினாள். மறுநாள் ஒரு கடிதம் எழுதினாள்.

பணம் சம்பாதித்தது போதுமென்றும், உடனே புறப்பட்டு வந்து விடும்படியும் மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். "உங்கம்மாமேல் ஆணை; என் தலைமேல் ஆணை; குழந்தைமேல் ஆணை; மாரியம்மன் ஆணை; நீ இனிமேல் கள்ளுக்கடை வழி போகக்கூடாது" என்று சபதம்வைத்தாள்.

சந்திரகாசு இதற்கெழுதிய பதிலில் தான் குடிப்பதை விட்டுவிட்ட தாகவும், இனிமேல் பணம் சேர்ந்து விடுமென்றும், இரண்டு மாதத்தில் 100 ரூபாய் அனுப்புவதாகவும், அப்புறம் ரூ. 200 சம்பாதித்துக்கொண்டு திரும்பி விடுவதாகவும் எழுதியிருந்தான்.

இப்படியே ஐந்து வருஷம் சென்றது. சந்திரகாசனாவது, பணமாவது வந்து சேர்ந்தபாடில்லை. இதற்கிடையில் கிழவி செத்துப்போனாள். அபிராமி ஆபத்துக்கென்று வைத்திருந்த இருபது ரூபாயைக் கிழவியின் அந்தியகாலத்தில் அவளுக்கு வேண்டியது செய்வதற்கும், கருமாந்தரத் துக்கும் செலவழித்து விட்டாள். அடுத்த வருஷம் அவளே காயலாவாய்ப் படுத்துக் கொண்டாள். ஒரு மாதம் ரொம்பவும் கஷ்டப்பட்டாள். அந்த சமயத்தில் கல்லும் உருகும்படியான ஒரு கடிதம் அவள் சந்திரகாசுவுக்கு எழுதினாள்.

* * * *

கடிதம் ஒன்று வந்தது. "ரூபாய் நூறு மணியார்டர் செய்திருக்கி றேன்" என்ற வார்த்தைகளைப் படித்தபோது அபிராமியால் நம்பவே முடியவில்லை. உண்மையாகவே அப்படி எழுதியிருக்கிறதா வென்று திருப்பித் திருப்பிப் படித்தாள். பிறகு ஓடிப்போய் தபால்காரனை வழி மறித்துக் கேட்டாள். "கடிதம் முதலில் வந்துவிடும். பணம் மெதுவாய்த் தான் வரும். பதினைந்து நாள் ஆகும்" என்று தபால்காரன் சொன்னான்.

ஒரு வாரத்திற்கெல்லாம் குழந்தைக்கு வைசூரி வார்த்தது. அபிராமி பெரிதும் கவலைப்பட்டாள். பணம் வந்ததும் ஊர்க்கோயில்களுக்கெல் லாம் அபிஷேகம் செய்து வைப்பதாய் வேண்டிக்கொண்டாள். ஒவ்வொரு நாள் காலையும் தூக்கம் விழித்ததும் 'இன்று பணம் வராதா?' என்றெண் ணிக் கொண்டே எழுந்திருந்தாள்.

வெள்ளிக்கிழமை வந்தது. "ஐயோ! இன்று பணம் வந்தால் மாரி யம்மனுக்கு மாவிளக்கு எற்றலாமே?" என்று நினைத்தாள். தபால்காரன் வருகிறானாவென்று எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். கடைசி யாக, உச்சிவேளையில் தபால்காரன் வந்தான். மணியார்டரும் கொண்டு

வந்தான். அபிராமி தன் கவி தீர்ந்துவிட்டது, தான் தெய்வங்களை வேண்டியதெல்லாம் வீண் போகவில்லை யென்றெண்ணினுள்.

தபால்காரன் சாட்சி போடுவதற்கு ஒருவனைக் கூட்டி அழைத்து வந்திருந்தான். அவன் அந்த ஊர்க் கள்ளுக்கடைக் குத்தகைதாரன். தபால்காரன் அபிராமியிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு குத்தகைதாரனிடம் சாட்சியும் வாங்கிக்கொண்டான். பிறகு, 98 ரூபாய் எண்ணி அவனிடம் கொடுத்து, "அம்மாவிடம் கொடுங்கள்" என்றுன். அபிராமியைப் பார்த்து, "100 ரூபாய் வந்தால் ஐந்து ரூபாய் வாங்குவது வழக்கம். நீங்கள் ஏழையானதால் இரண்டு ரூபாய் தான் எடுத்துக் கொண்டேன்" என்றுன்.

அபிராமி பணம் பெற்றுக் கொள்வதற்காகக் கையை நீட்டினுள்.

குத்தகைதாரன் சொன்னுன்:—"அம்மா! இது எனக்குச் சேர வேண்டிய பணம். உன் புருஷன் எனக்கு நாற்பது ரூபாய்க்குப் பத்திரம் எழுதிக்கொடுத்தான். வட்டியும் முதலும் சேர்ந்து இப்பொழுது 110 ரூபாயாகிறது. 98 ரூபாய் போனுல் பாக்கி 12 ரூபாய்" என்றுன்.

இடிவிழுந்ததுபோல் அபிராமி திகைத்துப் போனுள். அவள் தலை கிறு கிறு வென்று சுழன்றது. எங்கேயோ உயரத் தூக்கிக்கொண்டு போவதுபோல் இருந்தது. குத்தகைதாரன் மேலும் கூறினுன்:—"இருந்தாலும் உன்னை அடியோடு வயிற்றிலடிக்க எனக்கு மனமில்லை. இதை வாங்கிக்கொள்ளு" என்று சொல்லி நாலு ரூபாய் எடுத்துக்கொடுக்க வந்தான். அபிராமிக்கு அப்போதுதான் நிலைமை யென்னவென்பது கொஞ்சம் விளங்கிற்று. "ஐயோ! இதென்ன அநியாயம்! இந்த ஊரிலே கேட்பாரில்லையா?" என்று அவள் கூச்சலிட்டாள்.

கூக்குரல் போட்டதும் கூட்டம் சேர்ந்துவிட்டது. ஊர் நாட்டாண்மைக்காரர்களில் ஒருவன் வந்தான். "இதைப் பஞ்சாயத்துப் பண்ணித் தான் தீர்க்கவேண்டும். அதுவரையில் பணம் என்னிடம் இருக்கட்டும்" என்று சொல்லி வாங்கிக் கொண்டான். அன்று சாயங்காலம் ஊர்ச் சாவடியில் பஞ்சாயத்துக் கூடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அந்த ஊரில் வழக்கமென்ன வென்றுல், எந்த வழக்குக்காகப் பஞ்சாயத்துக் கூடினுலும் வாதி பிரதிவாதி இரண்டு பேரும் சேர்ந்து பஞ்சாயத்துக்காரர்களுக்காகக் கள்ளு வாங்கி வைத்துவிட வேண்டும். வெள்ளையப்பன் உள்ளே போனுல்தான் நியாயம் நன்ருய் விளங்குமென்பது அந்த ஊர்ப்பிரமுகர்கள் அபிப்பிராயம். ஆனுல் இந்த வழக்கிலே வாதி ஏழைப் பெண்பிள்ளையானதினுலும், பிரதிவாதி கள்ளுக் கடைக்காரனுதலாலும் பிரதிவாதியே எல்லாருக்கும் கள்ளு 'சப்ளை' செய்யவேண்டியதென்று தீர்மானித்தார்கள்.

ஊர்ச்சாவடியில் பஞ்சாயத்துக் கூடிற்று. மொக்தைகள் ஏராளமாய் உருண்டன. பஞ்சாயத்துக்காரர்களுக்கு மட்டுமென்றி வேடிக்கை பார்க்க வந்தவர்களுக்குக் கூட அன்று வெகு 'மஜா'. நெடுநேரம் நியாயம் பேசியான பிறகு, பத்திரம் காலாவதியாகி இருந்தாலும் வாங்கிய கடனைக் கொடுக்கத்தான் வேண்டுமென்றும், ஆகையால் பணம் கள்ளுக் குத்தகைதாரனுக்கே சேரவேண்டியதென்றும், இருந்தாலும் அபிராமியின் எழ்மையை உத்தேசித்து அவளுக்குப் பத்து ரூபாய் கொடுத்துவிட்டு 88 ரூபாய் அவன் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், பத்திரத்தைக் காதுகிள்ளி அவளிடம் கொடுத்துவிட வேண்டுமென்றும் பஞ்சாயத்து சபையார் தீர்ப்பளித்தார்கள்.

அம்மை வார்த்த பையன் நாலு நாளைக்கெல்லாம் இறந்துபோனான். பஞ்சாயத்து செய்தவர்கள் உள்பட ஊரார் மிகவும் இரக்கப்பட்டுப் பொதுச் செலவில் பிரேதத்தை எடுத்து அடக்கம் செய்தார்கள். அன்றைய தினமே அபிராமிக்கு ஒரு கடிதம் வந்தது. சந்திரகாசன் மிகவும் நீளமாய் எழுதியிருந்தான். ஆனால் கரைகாணாத துக்கத்தில் மூழ்கியிருந்த அபிராமிக்குப் பின்வரும் விஷயங்கள்தான் அதில் புலப்பட்டன :—"பணம் அனுப்பியதும், ஊருக்கு வந்து உன்னையும் குழந்தையையும் பார்க்கவேண்டுமென்று ஆசையுண்டாயிற்று—வெறி பிடித்தாற்போல விருந்தது—கையில் பணமில்லை—50 ரூபாய் திருடிக்கொண்டு கிளம்பினேன்—பிடித்து ஜெயிலில் போட்டுவிட்டார்கள்—இரண்டு வருஷம் கடுங்காவல்—இதுவும் நல்லதுதான்—ஜெயிலில் கள்ளு சாராயம் கிடையாது—இரண்டு வருஷத்தில் மறந்து விடுவேன்—விடுதலையானதும் ஊருக்கு ஒரே ஓட்டமாய் வருவேன்."

* * * *

மறுநாள் முதல் அபிராமி காணமற்போனாள். அரசூருக்கு எட்டு மைல் கிழக்கே ஒரு ஸ்திரீயின் பிரேதம் ஆற்றில் மிதந்து வந்து ஒதுங்கிற்று. அவ்வூர் கிராமாதிகாரி அதையெடுப்பித்துப் போலீசுக்குத் தெரியப்படுத்தினர்.

* * * *

இரண்டு வருஷங் கழித்துச் சந்திரகாசு வெகு ஆவலாக ஊருக்குத் திரும்பிவந்து சேர்ந்தபோது தன் குடிசை இருந்த இடத்தில் குப்பைமேடு போடப்பட்டிருப்பதைக் கண்டான்.

# சம்பள பட்வாடா தினம்
## இந்தியாவிலும் அமெரிக்காவிலும்

தொழிலாளர்களுடைய சம்பள பட்வாடா தினத்தில் நம்முடைய பட்டணங்களில் எந்தக் கடைகளில் அதிக வியாபாரம் நடக்கிறது என்பது அனைவரும் அறிந்த விஷயம். இதைப்பற்றி முன் ஒரு முறை போட்ட படத்தை மறுபடியும் அடியில் காட்டுகிறோம்.



இத்துடன் ஒத்துப்பார்க்க வேறொரு படம் கீழே காட்டப்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் நிறைவேறியதன் பயனாக அங்கே கள்ளு சாராயக்கடைகள் இல்லை. கூலிபெற்ற பின் அமெரிக்காவில் பணத்தை என்ன செய்கிறார்கள் என்பதை இதில் பார்க்கலாம். சிறு தொகைகளை வாங்கி வைத்துக் கொண்டு வேண்டியபோது வட்டியுடன் திருப்பிக் கொடுக்கும் பாங்கிகளில் திரள்திரளாகக் கூலிக்காரர்கள் பணம் செலுத்துகிறார்கள். நம்முடைய நாட்டிலும் கள்ளு சாராயக் கடைகள் தொலைந்தால் தொழிலாளர்கள் பாங்கிகளில்பணம் போடாவிட்டாலும், துணி மணி, பால், தயிர் வேண்டியவளவு வாங்கி சந்தோஷமா யிருப்பார்கள். கொஞ்சநாளில் கூட்டுறவு பாங்கிகளும் உண்டாகும்.




மதுவிலக்கு சட்டம் ஏற்பட்ட அமெரிக்காவில் தொழிலாளர்கள் சம்பளம் வாங்கின தினம்

# சுதந்திரம்

"மதுவிலக்குச் சட்டம் செய்தல் மனிதர்களின் சுதந்திரத்தில் தலையிடுவதல்லவா ?" என்று ஓர் ஆட்சேபம் சொல்லுகிறார்கள். இது பெரும் பொய். உண்மையில், மனிதர்களின் சுதந்திரத்தைக் கள்ளரக்கன் பறிக்காமல் தடுப்பதற்கே நாம் சட்டம் வேண்டுமென்கிறோம். கள்ளுக்குடித்த மனிதனை சுதந்திரமுள்ளவன் என்று யாராவது சொல்லுவார்களா ? கள்ளைத் தொட்டவன் அந்த க்ஷணத்தில் சுயாதீன மிழந்து அடிமையாகிறான். கள்ளுக்கு அடிமையாகாமல் மனிதர்களைப் பாதுகாப்பதே மதுவிலக்குச் சட்டமாகும்.

மது சாரம் நமது சுதந்திரத்தில் தலையிடாதிருந்தால் நாமும் அதன் சுதந்திரத்தில் தலையிட வேண்டியதில்லை. ஆனால் அது அப்படி யிருக்கிறதா பாருங்கள் ! மதுபானம் எத்தனை மோட்டார் வண்டிகளை மோதச் செய்து விபத்து உண்டாக்குகின்றது ? எத்தனை ரயில் வண்டிகளை அது கீழே விழச்செய்கிறது ? எத்தனை சண்டை சச்சரவுகள், கலகங்கள் விளைவிக்கின்றது ? எத்தனை கொலைகள் செய்கின்றது? எத்தனை ஏழைப் பெண்களை அடியும், உதையும் படச் செய்கின்றது ? எத்தனை குழந்தைகளை பட்டினி போடுகின்றது ? எவ்வளவு குழந்தைகளை அநாதையாக்குகின்றது ? இப்படிப் பல்லாயிரம் வழிகளில் மனிதர்களின் சுதந்திரத்தில் மது தலையிடுவதாயிருக்க அதை யொழிப்பதற்குச் சட்டம் செய்தல் மனித சுதந்திரத்தைப் பறிப்பதாகுமா ?

---

பெர்னார்டு ஷா என்பவர் உலகப் பிரசித்திபெற்ற ஆங்கில ஆசிரியர். அவர் மதுபானத்தைப் பற்றிச் சொல்லுவதாவது:—"ஆறு துளி மதுசாரம் ஒருவன் வயிற்றில் போனால் அவனுடைய பகுத்தறிவு பத்தில் ஒரு பங்கு குறைந்து விடுகிறது. உடம்பு ஏதோ நல்ல நிலைமையிலிருப்பது போல் அவனுக்குத் தோன்றும். ஆனால் அவனுடைய அறிவானது மழுங்கி எவ்வித யோசனைக்கும் தகுதியற்றதாகும். உலகில் மக்கள் மிகவும் கேடான சமூக நிலைமைகளைச் சகித்துக்கொண்டு முன்னேற்ற மடையப் பெருமுயற்சி எதுவும் செய்யாதிருப்பதற்குக் காரணம் கோடிக்கணக்கான பேர் மதுபானத்தால்மூளை மழுங்கி மந்தமடைந்து விட்டிருப்பதேயாகும்."

# அநியாய வரி.

வரிகளில் நியாயவரியும் உண்டு, அநியாயவரியும் உண்டு. குடிகளுக்குக் கிடைக்கும் லாபத்தில் பொதுச் செலவுக்காக ஒரு பங்கு வசூலிப்பது நியாயமான வரி. குடிகளுக்கு நஷ்டமுண்டாக்கி அந்த நஷ்டத்தில் ஒரு பங்கை அடைவது அநியாய வரி. நிலவரியும், வருமானவரியும் அளவுக்குட்பட்டு வசூலித்தால் நியாயமான வரிகளாகும். இந்த வரிகளில் ஜனங்களுக்கு எவ்வளவு அதிக லாபம் வருகிறதோ, அவ்வளவுக்கு சர்க்காருக்கும் வருமானம் அதிகம். ஆனல் கள்வரி இப்படிப்பட்டதல்ல. இதில் குடிகளுக்கு நஷ்டம் எவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கு சர்க்காருக்கு வருமானம் அதிகம். சென்ற வருஷத்தில் கலால் வரிமூலம் இந்திய சர்க்காருக்கு 24 கோடி ரூபாய் கிடைத்தது. இந்த 24 கோடி சர்க்காருக்குக் கொடுப்பதற்காக ஜனங்கள் மொத்தம் 100 கோடி ரூபாய் நஷ்டமடைந்திருக்கிறார்கள். இது பண நஷ்டம் மாத்திரம். குடியினல் விளைந்த சுகநஷ்டம், திறமைக் குறைவு முதலியவைகளுக்குப் பெறுமானம் போட்டுப் பார்த்தால் இன்னும் பல கோடி ரூபாயிருக்கும். கலால் வரி எவ்வளவு அநியாயவரி என்பது இதிலிருந்து நன்கு விளங்கவில்லையா?

---

ஸ்ரீராமனைக் காட்டுக்கு அனுப்பின செய்தி யறிந்ததும் பரதன் துயரத்தில் மூழ்கித் தாயார் கௌசலையினிடம் ஓடி மகா ஆவேசத்துடன் தனக்கு அந்த சூழ்ச்சி தெரியவே தெரியாது என்று கோரமான ஆணைகள் இட்டுக்கொண்டான். "இராமன் காட்டுக்குப்போக நான் அனுமதித்தவனுயிருந்தால் மதுபானமும் விஷமும் விற்ற பாவத்தை நான் அடைவேனுக" என்றும், "கட்குடியனுவேனுக" என்றும் சபித்துக் கொண்டான். பாவத்திலும் மகாபாவம் கள்ளைக்குடிப்பதும் கள்ளை விற்பதும்.

लाक्षया मधुमांसेन लोहेन च विषेण च ।
सदैव बिभृयाद्भृत्यान्यस्यार्यो अनुमते गतः ॥
मद्यप्रसक्तो भवतु स्त्रीष्वक्षेषु च नित्यशः ।
कामक्रोधाभिभूतश्च यस्यार्यो अनुमते गतः ॥

# 1928—9ம் வருஷத்திய சென்னை கலால் வருமானம்.

| ஜில்லா | | சாராயம் | கள்ளு | பீர், பிராந்தி, வுஸ்கி* | அபினி | கஞ்சா | அபராதம் | இதர வருமானம். | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| கஞ்சம் | ... ... | 772837 | 146334 | 900 | 502661 | 141334 | 14530 | | 1579134 |
| விசாகப்பட்டினம் | ... ... | 1330196 | 353530 | 4376 | 736146 | 78346 | 15450 | | 2520036 |
| கீழ் கோதாவரி | ... ... | 1267079 | 849373 | 59906 | 866845 | 43463 | 19506 | | 3112871 |
| மேல் கோதாவரி | ... ... | 985666 | 838366 | 800 | 328501 | 32771 | 22462 | | 2211576 |
| கிருஷ்ணா | ... ... | 1446256 | 560178 | 7620 | 143425 | 41825 | 11028 | | 2212720 |
| குண்டூர் | ... ... | 888538 | 354485 | 1020 | 162422 | 75553 | 13785 | | 1497786 |
| நெல்லூர் | ... ... | 514590 | 264162 | 650 | 63573 | 52873 | 14911 | | 915787 |
| கடப்பை | ... ... | 812605 | 321973 | 450 | 33832 | 83864 | 6462 | | 1260586 |
| அனந்தப்பூர் | ... ... | 462551 | 1279175 | 1006 | 14813 | 49302 | 10887 | | 1819701 |
| பல்லாரி | ... ... | 560910 | 1140524 | 8829 | 10569 | 67718 | 6265 | | 1795927 |
| கர்நூல் | ... ... | 858889 | 1630907 | 900 | 53241 | 83409 | 13069 | | 2645499 |
| சென்னை | ... ... | 1959839 | 1056852 | 560813 | 134160 | 130030 | 7071 | | 3903845 |
| செங்கற்பட்டு | ... ... | 905036 | 1415802 | 175616 | 23580 | 39459 | 21963 | | 2584460 |
| சித்தூர் | ... ... | 319392 | 644718 | 450 | 34820 | 60107 | 7221 | | 1068661 |
| வட ஆற்காடு | ... ... | 1317204 | 1640210 | 3590 | 60657 | 60011 | 11724 | | 3096145 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தென் ஆற்காடு ... ... | 1501277 | 824482 | 146224 | 38629 | 37664 | 16828 | | 2569536 |
| தஞ்சாவூர் ... ... | 596008 | 2876216 | 22623 | 146921 | 67022 | 18518 | | 3730466 |
| திருச்சினுப்பள்ளி ... ... | 860207 | 1058772 | 20197 | 48256 | 45234 | 8059 | | 2042817 |
| மதுரை ... ... | 721820 | 809906 | 42326 | 85374 | 124971 | 7186 | | 1793593 |
| ராமனுதபுரம் ... ... | 286950 | 696913 | 950 | 50911 | 83761 | 15841 | | 1140722 |
| திருநெல்வேலி ... ... | 704657 | 718518 | - 2050 | 125723 | 106165 | 27606 | | 1689857 |
| கோயமுத்தூர் ... ... | 946351 | 1881509 | 45801 | 88304 | 103682 | 28149 | | 3100190 |
| நீலகிரி ... ... | 279427 | | 326594 | 33823 | 4437 | 2111 | | 646507 |
| சேலம் ... ... | 658499 | 1932484 | 5399 | 40695 | 72502 | 24895 | | 2739383 |
| தென் கந்நடம் ... ... | 576694 | 811278 | 1100 | 14029 | 42247 | 17816 | | 1468681 |
| மலையாளம் ... ... | 710051 | 1061487 | 20340 | 98878 | 67118 | 30379 | | 2001176 |
| மேட்டூர் ... ... | 8854 | 59602 | 4680 | | | 392 | | 73531 |
| அஞ்சங்கோ ... ... | | | | 100 | 3500 | | | 8000 |
| 1928—29ல் மொத்தம் ... | 22252383 | 25227756 | 1465210 | 3940888 | 1798368 | 394914 | 107515 | 55229193 |
| 1927—28ல் மொத்தம் ... | 20938039 | 24602664 | 1290520 | 3695287 | 1692850 | 318668 | 255106 | 52824060 |

1928—29 ல் மொத்தம் கலால் வருமானம் ரூ. 55229193

குறிப்பு:*—வெளிநாட்டு சாராயவகைகளின்மேல் துறைமுகத் தீர்வைகள் மாகாண ராஜாங்கத்திற்கு வருவதில்லை. அது போக மற்ற வருமானம் இங்கே காட்டியிருக்கிறது.

கஞ்சா, அபினி மேல்கண்ட ஜில்லாக்களில் செலவானது தவிர திருவாங்கூருக்கும் கொச்சிக்கும் போவதில் வருமானம் ரூ. 617450.

# கடற்கரைக் கிளிஞ்சல்

ஏழைத் தொழிலாளர்களுக்குள் பீர் பழக்கத்தை அதிகமாய்ப் புகுத்தி வருகிறார்கள். 1927-ம் வருஷத்தில் சென்னை மாகாணத்தில் செலவான பீர் 7 லக்ஷம் காலன். 1929-ல் கொஞ்சம் குறைய 10 லக்ஷம் காலன்.

* * * *

எவ்வளவு தூரம் பிரசாரம் நடத்தினால் கடைகளை மூடும்படி கேட்கலாம் என்றும், அதற்குமுன் அவசரப்பட்டுத் தங்களைத் தொந்தரவு செய்யக் கூடாது என்றும் ஜில்லா மதுவிலக்குக் கமிட்டிகளுக்கு அளவு காட்டுவதற்காகக் கலால் இலாகா தலைவர் சுற்றுப்பிரயாணம் செய்யப்போகிறார்.

* * * *

பெஜவாடாவில் ஸ்ரீமான் வேங்கடபதிராஜு எம். எல். சி. அவர்களின் தலைமையில் ஆந்திர நாட்டு ஸ்தலஸ்தாபனங்களின் மகாநாடு நடைபெற்றது. இந்த மகாநாட்டில் பூரண மதுவிலக்கை வற்புறுத்தி ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது பெரிதும் பாராட்டத்தக்கதாகும். மதுபானக் கடைகள் எல்லாவற்றையும் மூடிவிடும்படி சர்க்காரைக் கேட்டுக் கொண்டும், மதுவிலக்கை நடத்திவைப்பதில் தாங்கள் பூரண உதவி செய்யச் சித்தமாயிருப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். மேலும் ஆந்திர தேசத்திலுள்ள தாலுகா, ஜில்லா போர்டுகள், நகர சபைகள் எல்லாவற்றையும் இதேமாதிரி தீர்மானம் செய்யும்படி கேட்டுக் கொண்டிருப்பதுடன், ஸ்தலஸ்தாபனங்களுக்குட்பட்ட தென்னைமரங்களைக் கள்ளுக்கு விடக்கூடாதென்றும், அவற்றுக்குச் சொந்தமான நிலத்தில் கள்ளுக்கடை வைக்கக் கூடாதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

* * * *

மன்னார்குடி தாலுகா போர்டில் நிறைவேறிய மதுவிலக்குத் தீர்மானத்தைச் சென்ற மாதம் வெளியிட்டிருந்தோம். மன்னார்குடியைப் பின்பற்றி நன்னிலம், குளித்தலை, நாமக்கல் தாலுகா போர்டுகளிலும் இத்தகைய தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன. சேலம் ஜில்லாவில் சர்க்காரால் நியமிக்கப்பட்ட மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டியார் திருச்செங்கோடு, நாமக்கல், ராசிபுரம் தாலூகாக்களில் எல்லாக் கள்ளு சாராயக் கடைகளையும் மூடிவிட வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்கிறார்கள்.

* * * *

இந்தியத் தொழிலாளிகளின் நிலைமையைப் பற்றி விசாரணை செய்ய அரசாங்கத்தார் ஒரு கமிஷன் நியமித்திருப்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இந்தக் கமிஷனின் தலைவர் கனம் விட்லி. ஆகையால் இதற்கு விட்லி கமிஷன் என்று பெயர் வழங்குகிறது. இந்தக் கமிஷன் சமீபத்தில் தில்லியில் விசாரணை நடத்தியபோது பஞ்சாப் வியாபார சங்கத்தார் சாட்சியம் சொன்னார்கள். தொழிலாளர் முன்னேற்றத்துக்கு மதுவிலக்கு மிகவும் அவசிய மென்று அவர்கள்

சொல்லி யிருக்கிறார்கள். மதுபானத்தை யொழித்தால் தொழிலாளர் சன்மார்க்கத்துறையில் அபிவிருத்தியடைவதுடன், அவர்களுடைய வேலைத்திறமையும் அதிகமாகுமென்று மேற்படி சங்கத்தார் தெரிவித்திருக்கிறார்கள். இது சந்தோஷமான விஷயம். தொழிலாளிகளின் நன்மையில் கொஞ்சமேனும் கருத்துடையவர்கள் முதலில் கள்ளை யொழிக்கப் பாடுபடவேண்டும்.

* * * *

கலால் கமிஷனருடைய 1928-29 மதுபான இலாகா அறிக்கையைப்பார்த்தால் மந்திரியாருடைய மதுவிலக்குப் பிரசாரப் பேச்சைப் பற்றி பழைய சந்தேகமே மறுபடி கிளம்புகிறது. "அதிகமாய்"க் குடிப்பதை நிறுத்தவே சர்க்கார் பிரசாரம் செய்யப்போவதாய்ப் பொருள் படுமாறு எழுதியிருக்கிறார். ஆனால் இன்னும் ஒருவிதமான பிரசாரமும் தீவிரமாய்ச் செய்யவில்லை. கடைகள் மும்முரமாகவே விற்றுக் கொண்டிருக்கின்றன.

* * * *

மதுபானப் பரிசுகள்: தமிழ் ஜில்லாக்களில் சாராயம் குடிப்பதில் சென்னை, வட ஆற்காடு, தென் ஆற்காடு இந்த ஜில்லாக்களும், கள்ளுக் குடியில் தஞ்சாவூர், சேலம், கோயமுத்தூர் இந்த ஜில்லாக்களும், அபினி உட்கொள்ளுவதில் சென்னை, தஞ்சாவூர், மலையாளம் இந்த ஜில்லாக்களும், கஞ்சாவில் சென்னை, மதுரை, திருநெல்வேலி இந்த ஜில்லாக்களும் முதல் பரிசு பெறலாம்.

* * * *

கள்ளை யொழிக்கவேண்டு மென்றால் "பணத்துக்கு வழி என்ன?" என்று சர்க்கார் கேட்கிறார்கள். கள்ளை யொழித்தல் தான் பணத்துக்கு வழி! தேசத்தில் எவ்வளவோ நல்ல காரியங்களுக்குப் பணமில்லாமல் போவது கள்ளினால்தான். தற்போது லாகிரி வஸ்துக்களுக்காக ஏறக்குறைய 100 கோடி ரூபாய் வருஷந்தோறும் இந்தியாதேசத்தில் செலவாகிறது. இவ்வளவு பணமும் கல்வி, சுகாதாரம், உணவு, உடை முதலியவைகளுக்காகச் செலவழிந்தால் தேசம் எவ்வளவு முன்னேற்ற மடையும்?

* * * *

கள்ளுக்கடை, சிறைச்சாலை, தூக்குமேடை இம்மூன்றும் நெருங்கிய உறவு பூண்ட மும்மூர்த்திகள் என்று மேனாட்டுப் பத்திரிகை ஒன்று சொல்லுகிறது.

* * * *

இங்கிலாந்தின் பெயர் பெற்ற இராணுவ தளபதிகளில் ஒருவரான லார்டு உல்ஸ்லி என்பவர் சொன்னது:—"நமது சைனியத்தில் நடக்கும் குற்றங்களுக்கெல்லாம் மூலகாரணத்தை ஆராய்ந்தால் குடிமயக்கமே என்று தெரியவரும். பக்கத்தில் எங்கும் மதுபானக் கடைகள் இல்லாத விடத்தில் நமது போர்வீரர்கள் தங்கும் காலங்களில் அவர்களிடையே எவ்விதக் குற்றமும் நிகழ்வதில்லை." லார்ட் ராபர்ட்ஸ் என்னும் மற்றொரு பெரிய தளபதியும் இதேவிதமான அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

இயந்திரங்களைக் கொண்டு ஏராளமான பொருள் உற்பத்தி செய்யும் தேசங்கள் அந்த சாமான்களை விற்க வெளிநாடுகளையே நம்பியிருக்க வேண்டும். வெளிநாடுகள் இறக்குமதி வரி போட்டுத் தடைசெய்தால் சாமான் உற்பத்தி செய்யும் தேசத்துக்குக் கஷ்டந்தான். இங்கிலாந்து இவ்வாறு சாமான் உற்பத்தி செய்யும் தேசங்களில் ஒன்று. ஆனால் அந் நாட்டில் பெயர்பெற்ற முதன் மந்திரியாயிருந்த லாயிட் ஜார்ஜ் சொன்னதைக் கேளுங்கள்:—

"நமது வியாபாரத்துக்கும், தொழில்களுக்கும் உலகம் முழுவதிலும் ஏற்பட்டுள்ள இறக்குமதி வரிகளால் எவ்வளவு தடைகள் உண்டோ அதைவிட அதிக தடை இந்த நாட்டில் நடக்கும் மது வியாபாரத்தினால் ஏற்படுகிறது."

* * * *

அமெரிக்கா தேசம் முழுவதிலும் பூரண மதுவிலக்குச் சட்டம் ஏற்பட்டு ஒன்பது வருஷம் ஆகிறது. இந்த ஒன்பது வருஷத்தில் அந்த நாடு அடைந்திருக்கும் முன்னேற்றத்தை அமெரிக்க வியாபார மந்திரி பின்வருமாறு எடுத்துக் காட்டினார்:— "தேசத்தின் மொத்தவருமானம் 300 கோடி டாலர், அதாவது 100க்கு 45 வீதம் அதிகமாகியிருக்கிறது. சாமான் உற்பத்தியும் உபயோகமும் 100க்கு 25 வீதம் அதிகமாயின. 35 லட்சம் புதிய வீடுகள் கட்டப்பட்டன. 1கோடி 40லட்சம் மோட்டார் வண்டிகள் இக்காலத்தில் செய்து விற்கப்பட்டன. தொழிலாளிகளின் வேலை நேரம் குறைந்திருக்கிறது; சம்பளம் அதிகமாகியிருக்கிறது. ஹைஸ்கூல் மாணுக்கர்கள் 100க்கு 66 வீதமும், கலாசாலை மாணுக்கர்கள் 100க்கு 75 வீதமும் அதிகமாகி யிருக்கிறார்கள்." மதுவிலக்குச் சட்டத்தினால் விளையக்கூடிய அபார நன்மைக்கு இதைவிடச் சிறந்த அத்தாட்சி வேறென்ன வேண்டும்?

* * * *

நான்கு வயதுப் பையன் ஒருவன் ஆற்றில் தவறிவிழுந்து மாண்டு போனான். பிரேத விசாரணை செய்த ஜூரிகள் "தற் செயலான மரணம்" என்று தீர்ப்புச் சொன்னார்கள். ஆனால் அத்துடன் நிற்கவில்லை. ஆற்றில் பையன் விழுந்த இடம் மிக ஆபத்தான இடமென்றும் அந்த இடத்தில் வேலி போட்டு யாரும் தவறி விழாமல் ஜாக்கிரதை செய்ய வேண்டு மென்றும் தீர்ப்பில் எழுதிவைத்தார்கள்.

மதுபான மென்னும் பயங்கர ஆற்றில் எத்தனையோ மூர்க்கர்கள் தவறிவிழுந்து அதோகதி அடைகிறார்கள். சட்டமென்னும் வேலி போட்டுத்தடுத்து அவர்களைப் பாதுகாத்தல் சர்க்கார் கடமையல்லவா?

* * * *

"திருட்டுக் குடியைப்பற்றி என் பயப்படவேண்டும்? அமெரிக்காவின் தரைப்படை, கடற்படையெல்லாம் எதற்காக இருக்கின்றன? அவசியமானால் சைன்யம் முழுவதையும், கப்பல்படை முழுவதையும் உபயோகித்துத் திருட்டுக்குடியைத் தடுக்கலாம். இதைவிட நல்ல காரியத்தில் அப் படைகளை உபயோகிக்க முடியாது" என்று ஹென்ரி போர்டு சொல்லுகிறார்.

இந்தியாவுக்கும் இது பொருந்தும். திருட்டுக் குடியைக் கூடத் தடுக்க முடியாவிட்டால் கோடிக்கணக்கில் ரூபாய் விழுங்கிக்கொண்டிருக்

கும் பெரிய சைன்யமும் போலீசும் நமக்கெதற்காக ? நம்முடைய நாட்டில் திருட்டுக்கள்ளு குடிப்பவர்கள் தைரியசாலிகளுமல்ல; புத்திசாலிகளுமல்ல. அவர்களைக் கண்டு பயப்படுவானேன் ?

* * * *

மது விலக்குப் பேச்சுக் கேட்பதற்காகப் பெரிய கூட்டம் கூடியிருந்தது. பிரசங்கி மேடை மீதேறியதும் "கனவான்களே! இன்று மது விலக்கைப்பற்றி உங்களுக்குச் சொல்லப்போகிறேன். ஆனல் முதலில் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். மது விலக்கு என்றால் என்ன ? யாருக்காவது தெரியுமா ?" என்றார். சற்றுநேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. மறுபடியும் "யாருக்காவது தெரியுமா ? தெரிந்தவர்கள் எழுந்து சொல்லுங்கள்" என்றார். உடனே மெலிந்து உலர்ந்து போயிருந்த ஒரு சிறு பையன் எழுந்து நின்று "எனக்குத் தெரியும். மது விலக்கு என்றால் வயிறு நிறைய அரிசிச்சோறு" என்றான். எல்லாரும் சிரித்தார்கள். "அது எப்படி, தம்பி! மதுவிலக்கு என்றால் எப்படி அரிசிச்சோறு ஆகும்?" என்று பிரசங்கி கேட்டார். "எங்கப்பா கள்ளுக்கடைக்குப் போகாமல் வீட்டுக்கு வந்தால் மறுநாள் எங்களுக்கு அரிசிச்சோறு கிடைக்கிறது. கள்ளுக் கடைக்குப் போய் விட்டு வந்தால் கம்பங் கூழ்தான். அதுகூடச் சில நாள் கிடைக்காது. பட்டினி கிடக்க வேண்டும்" என்றான் பையன். "பிரசங்கம் எல்லாம் இந்தப் பையனே செய்துவிட்டான். உங்களுக்கு நான் புதிதாய்ச் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை" என்று பிரசங்கி கூறிவிட்டு மேடையிலிருந்து இறங்கிப் போனார்.

* * * *

அப்ரகாம் லிங்கன் என்பவரைப்பற்றிக் கேள்விப்பட்டதுண்டா ? அமெரிக்கக் குடியரசின் அக்கிராசனர்களுக்குள்ளே அவர் பிரசித்திபெற்ற ஒருவர். அமெரிக்காவில் வெகு காலமாய் அடிமைகளாயிருந்த நீகிரோக்களை விடுதலை செய்வதற்கு அங்கே ஒரு கிளர்ச்சி எழுந்தது. வட மாகாணத்தார் இதை ஆதரித்தார்கள். தென் மாகாணத்தார் எதிர்த்தார்கள். இவர்களுக்குள் பெரிய யுத்தமே நடந்துவிட்டது. அப்ரகாம் லிங்கன் வட மாகாணத்தாருக்குத் தலைவராயிருந்து தென்மாகாணத்தாரைத் தோற்கடித்து அடிமைகளை விடுதலை செய்தார். இத்துடன் அவர் திருப்தியடைந்தாரென நினைக்கிறீர்களா ? கிடையாது. அவர் சொன்னதைக் கேளுங்கள் :—"நமது வெற்றி இன்னும் பூரணமாகவில்லை. நமது நாட்டிலிருந்து அடிமைத்தனம் அழிந்ததுபோலவே கள்ளுக்குடியும் ஒழிந்துபோக வேண்டும். இதுவும் போதாது. உலகத்தின் எந்தப் பகுதியிலும் ஓர் அடிமையாவது ஒரு குடியனாவது இல்லாமற் போகவேண்டும். மக்கட்குலம் இத்தகைய மகாஜயம் அடையும்போது, இவ்விருவகை விடுதலைகளுக்கும் பிறப்பளித்த நமது தேசம் எவ்வளவு பெருமையுடன் விளங்கும்!"

இந்த மகான் அன்று போட்ட விதைதான் இப்பொழுது அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் என்னும் பெரிய விருட்சமாகிச் செல்வம், கல்வி, சுகம் முதலிய பழங்களைத் தந்து வருகிறது. உலகிலேயே கள் இல்லாமல் போகவேண்டுமென்று அவர் கண்ட கனவு நிறைவேறுவதற்கு நீங்கள் துணைபுரியப் போகிறீர்களா ?

இங்கிலாந்து அரசாங்கத்தின் ஸ்தலசுயாட்சி கமிட்டி சுகாதாரவிஷயங்களில் யோசனை சொல்லப் பிரபல வைத்தியர்களை நியமிப்பதுண்டு. சில காலத்துக்கு முன் இந்த உத்தியோகம் வகித்த ஸர் ஆர்தர் நியூஷோம் என்பவர் கூறியது :—“ சுகாதார வைத்தியர்கள் தேசத்தின் பல பாகங்களிலும் மரண விகிதத்தைக் குறிப்பிடும் தேசபடம் ஒன்று தயாரித்தார்கள். அதை ஆராய்ந்து பார்த்ததில் எந்த விடங்களில் மதுபானக் கடைகள் அதிகமோ அங்கேதான் ஜனங்களின் வறுமை அதிகம், அங்கேதான் மரண விகிதமும் அதிகம் என்று தெரியவந்தது.”

*  *  *  *

அமெரிக்காவில் கிளீவ்லாண்டு மாகாணக் கோர்ட்டில் இவ்வருஷம் ஜூலை-மீ 5உ ஒரு ருசிகரமான சம்பவம் நிகழ்ந்தது. கோர்ட்டு அதிகாரியான எட்வர்ட் சாட்லர் என்பவர் அன்று காலை கோர்ட்டுக்கு வந்தும் வழக்கு ஜாபிதாவை எடுத்துப் பார்வையிட்டார். உடனே அவர் ஆச்சரியத்துடன் சொன்னதாவது :—“ என்ன அநியாயத்தைச் சொல்லுவது ? உலகமே தலைகீழாகி வருகிறது ! ஒரு ஜட்ஜிக்காவது 30 வழக்குக்குமேல் இல்லை. விடுமுறைக்குப் பிறகு கோர்ட் திறந்ததும் ஒவ்வொரு ஜட்ஜிக்கு 450 வழக்குகளுக்குமேல் காத்திருந்த காலம் உண்டு. இப்போது 40 வழக்குக்கூட இல்லை. மதுவிலக்குச் சட்டம் என்னென்ன மாறுதல் செய்து விட்டது !”

இந்தியாவிலும் மதுவிலக்குச் சட்டம் செய்தால் பாதி கோர்ட்டுகளுக்குமேல் மூடிவிடலாம். போலீசு செலவும் அப்படியே.

*  *  *  *

கனடா நாட்டில் அண்டேரியோ என்னும் மாகாணத்திலுள்ள டாக்டர்கள் எல்லாருக்கும் மூன்று கேள்விகள் அனுப்பப் பெற்றன. கேள்விகளும் பதில்களும் வருமாறு :—

| கேள்வி | “ ஆம் ” என்று பதில் சொல்லிய டாக்டர்கள். | “ இல்லை ” என்று பதில் சொல்லியவர்கள். |
|---|---|---|
| (1) கள்ளு சாராயம் எதுவும் தொடாதவர்களைவிட மிதமாய்க் குடிப்பவர்களை நோய்கள் சுலபமாய்ப் பற்றுவது உண்மையா ? | 398 | 72 |
| (2) நோய்களிலும் விபத்துகளிலும், குடிப்பவர்களை விடக் குடியாதவர்கள் தப்பிப் பிழைப்பது சுலபம் என்பது உண்மையா ? | 408 | 45 |

# சங்கம் ஏற்படுத்துங்கள்

இந்தியாவில் இருபெரும் சங்கங்கள் மது விலக்கு வேலைசெய்து வருகின்றன. ஒன்று காங்கிரஸும் அதன் கிளை ஸ்தாபனங்களும். காங்கிரஸின் ஆதரவின் கீழ் மது விலக்குப் பிரசாரம் செய்யும் முறை ஏற்கனவே வெளியிடப்பட்டிருக்கிறது. காங்கிரஸின் சம்பந்தமில்லாமலும் மதுவிலக்குச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, "இந்திய மதுவிலக்குச் சங்க"த்தில் சேர்ந்து வேலை செய்யலாம். காங்கிரஸ் மதுவிலக்குப் போருக்கும் இந்திய மதுவிலக்குச் சங்கத்திற்கும் இவ்வருஷத்தில் ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியாரே காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகையால் காங்கிரஸைச் சேர்ந்தவர்களும், காங்கிரஸில் சேராமல் மதுவிலக்கு வேலைசெய்ய விரும்புவோர்களும் ஒத்துழைத்துப் போரை நடத்தல் எளிதாகும்.

அகில இந்தியக் காரியக் கமிட்டியின் தீர்மானத்தை அனுசரித்துத் தமிழ் நாட்டில் மதுவிலக்கு வேலை செய்வதற்காக ஸ்ரீமான் எம். பக்தவத்ஸலம், (13, சந்நிதித்தெரு, மயிலாப்பூர்,) ஸ்ரீமான் கே. சந்தானம், (காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு) இவ்விருவர்களும் காரியதரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை நகரத்திலும், செங்கற்பட்டு ஜில்லாவிலும் மதுவிலக்குப் பிரசார வேலையை ஸ்ரீமான் பக்தவத்ஸலம் பார்த்துக் கொள்வதென்றும், மற்ற ஜில்லாக்களில் மதுவிலக்கு வேலையை ஸ்ரீமான் சந்தானம் பார்த்துக்கொள்வதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆங்காங்குத் தொண்டர்கள் முன்வந்து இந்த முக்கியமான பிரசாரத்தைச் செவ்வனே நடத்துவார்களென்று நம்புகிறோம். ஒவ்வொரு ஊரிலும் காங்கிரஸ் மதுவிலக்குச் சங்கங்களைக் கூட்டிப் பெருங் கிளர்ச்சி எழுப்ப வேண்டும்.

காங்கிரஸில் சேராமலும் இராஜீய விஷயங்களில் சம்பந்தப் படாமலும் மதுவிலக்கு வேலையை மட்டும் செய்ய விரும்புகிறவர்கள் "இந்திய மதுவிலக்குச் சங்க"த்தில் சேரலாம். வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து சந்தா செலுத்திப் பூரண மதுவிலக்குக் கொள்கையை ஒப்புக்கொண்டு "இந்திய மதுவிலக்குச் சங்க"த்தின் கிளைச்சங்கமாகப் பதிவு செய்து கொள்ளலாம்.

மற்ற விவரங்கள் ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியாருக்கு எழுதித் தெரிந்து கொள்க.

Regd. No. M. 251

# மது விலக்குப் புத்தகங்கள்

## குடிகெடுக்கும் கள்

[பொருளடக்கம் :—குழந்தைகள் பேச்சு, தலைகீழ் நியாயம், பானைக்கும் சீசாவுக்கும் சம்பாஷணை, கள் வந்த கதை, கலால் வருமானம், விடுதலைப் பாட்டு.]

விலை அணா 1.

## திக்கற்ற பார்வதி

(இது கட்குடியால் வரும் கேட்டைக் காட்டும் ஒரு கதை)

விலை அணா 2.

கிடைக்குமிடம் :

எல்லாக் காதி வஸ்திராலயங்களும்,

அல்லது

காரியதரிசி, காந்தி ஆசிரமம்,

திருச்செங்கோடு.

சென்னை ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று; சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியாரால் வெளியிடப்பட்டது.